



# வேல் விருத்தம்
# மயில் விருத்தம்
# சேவல் விருத்தம்



# வேல் விருத்தம்
# மயில் விருத்தம்
# சேவல் விருத்தம்


| | வேல் | மயில் | சேவல் | ராகம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| | (காப்பு) – | சந்தன | கொந்தார் | நாட்டை | 3-4 |
| 1 | மகரம் | சந்தான | உலகில் | ஹம்ஸத்வனி | 5-7 |
| 2 | வெங்கான | சக்ரப் | எரியனைய | மோஹனம் | 8-10 |
| 3 | வேதாள | ஆதார | கரிமுரட் | சாரங்கா | 11-13 |
| 4 | அண்டர் | யுககோடி | அச்சப்பட | மலையம் | 15-17 |
| 5 | ஆலமாய் | சோதியிம | தானயிடு | பாகேஸ்ரீ | 18-20 |
| 6 | பந்தாடலி | சங்கார | பதிகமா | ஸி·ஷ்யர | 21-23 |
| 7 | அண்டங்க | திரப்பயோ | விருண | பீம்பளாஸ் | 24-26 |
| 8 | மாமுதல் | செக்கர் | வந்து ஆரப் | மாண்ட் | 27-29 |
| 9 | தேதெற | சிகர | உருவாய் | துர்கா | 30-32 |
| 10 | வலாரி | நிராசத | மகரசல | மத்யமாவதி | 33-35 |
| 11 | — | — | பூவிலயன் | ” | 36 |
| | — | எந்நாளும் | — | ” | 38 |

பாடம் பிழைகள் - திருத்தம் : பக்கம் 39

நாட்டை மயில் விருத்தம் - காப்பு ஆதி

சந்தன, பாளித குங்கும, புளகித
சண்பக கடக புயச்

சமர, சிகாவல, குமர, ஷடாநந,
சரவண, (குரவு) அணியும்

கொந்தள பார, கிராத, புராதநி
கொண்க எனப் பரவும்
கூதள சீதள பாதம் எனக்கருள்,
குஞ்சரி மஞ்சரி தோய்

கந்த, க்ருபாகர, கோமள, கும்ப
கர அதிப, மோகரத

கரமுக, சாமர கர்ண, விசால
கபோல விதான மத(த்து)

எந்த மகோதர, மூஷிக வாகன
சிந்துர பத்ம முகச்

மயில் விருத்தம். காப்பு

சந்தனம். (பாளிதம்) பச்சைக் கற்பூரம். குங்குமம் இவைகள் பூசியதாய். (புளகித) பெருமகிழ்ச்சியை ஊட்டுவதாய், சண்பக மாலை அணிந்ததாய், வீர கங்கணம் அணிந்ததாயுள்ள திருப்புயத்தை உடையவனும்

போர் செய்பவனும், (சிகாவல) மயில் வாகனத்தை உடையவனும் ஆன குமாரக் கடவுளே! ஆறு திருமுகங்களை உடையவனே! சரவணத்தில் தோன்றியவனே! குராமலர் அணியும்

கூந்தல் பாரத்தை உடைய, (கிராத) வேடர் குலத்தவளான, பழைய வளமை வள்ளியின் (கொண்க) நாயகனே! என்று போற்றப்படும் கூதள மலர் அணிந்துள்ளதும். குளிர்ந்துள்ளதுமான திருவடியை எனக்குத் தந்தருள்வாயாக; (குஞ்சரி) ஐராவதத்தால் வளர்க்கப் பட்டவள், (மஞ்சரி) தளிர் போன்ற மேனியினள் ஆகிய தேவசேனை (தோய்) அணையும்

கந்தக் கடவுளே! கிருபைக்கு இருப்பிடமானவனே! (கோமள) அழகு வாய்ந்த (கும்பம் கர அதிப) குடம் போன்ற மத்தகத்தை உடைய தலைவரும், (மோக ரத) ஆசையை விளைவிக்கும்

துதிக்கையோடு கூடிய முகத்தை உடையவரும், சாமரம் போன்ற காதை உடையவரும், (விசால கபோல) அகன்ற கன்னத்தில் வரும் (விதான மதத்து) விரிவான மதத்தை உடையவரும்

எங்களுக்கு உகந்த (மகோதர) பெருவயிறரும், [அல்லது: ஏக தந்த: ஒரு கொம்பை உடையவரும்] பெருச்சாளி வாகனத்தவரும், சிவந்த தாமரையன்ன திருமுகத்தை உடையவரும் ஆன

சிவ சுத கணபதி விக்ந விநாயக
தெய்வ சகோதரனே.

நாட்டை — சேவல் விருத்தம் - காப்பு — ஆதி

கொந்து ஆர் குழல் வரி வண்டு நவிடும் இயல்
கொண்டு, ஏழ் இசை மருளக்
குதலை மொழிந்து அருள் கவுரி சுதந்தரி
குமரன், இதம் பெறு பொற்

செந்தாமரைக் கடம், நந்தா வனம் உள
செந்தூர், எங்கும் உளான்
திலக மயிலில் வரு குமரன், வரிசை பெறு
சேவல் தனைப் பாட
வந்தே சமர் பொரு மிண்டு ஆகிய, கய
மா முகனைக் கோறி
வன் கோடு ஒன்றை ஒடித்துப் பாரதம்
மா மேருவில் எழுதிப்
பைந்தார் கொடு பல ராவணன் அன்பொடு
பணி சிவ லிங்கம் அதை
பார் மிசை வைத்த விநாயகன் முக்கட்
பரமன் துணையாமே.



சிவகுமாரராம் கணபதி, விக்கினங்களை நீக்குபவரும்
விநாயகரும் ஆகிய தெய்வத்துக்குச் சகோதரனே.

பூங் கொத்துக்கள் நிறைந்த கூந்தலில், (வரி) இசைப் பாடல்
களைப் பாடும் வண்டுகள், ஒலி செய்யும் தன்மை கொண்டு,
ஏழிசைகளும் மருட்சி அடையும்படியாக
மழலைக் குதலைப் பேச்சுக்களைப் பேசி அருளும் கவுரி, (சுதந்தரி)
தன் வயத்தினள் ஆகிய பார்வதியின் குமாரன், இனிமையைக்
கொண்டுள்ள அழகிய
செந்தாமரைக் காடுகளுடன், அழியாத சோலைகள் உள்ள திருச்
செந்தூரிலும், பிற தலங்கள் எங்கிலும் விளங்குபவன்
சிறந்த மயிலில் எழுந்தருளும் குமர மூர்த்தி ஆகிய முருக
வேளின் கீர்த்தி பெற்ற சேவலைப் பாடுதற்கு,
எதிர்த்து வந்து போர் புரிந்த, மதங் கொண்ட கஜமுகாசுரனை
(கோறி) கொன்று
வலிய தமது தந்தம் ஒன்றை ஒடித்து அது கொண்டு பாரதக்
கதையைப் பெரிய மேரு மலையில் எழுதியும்
பசுமை கொண்ட மாலைகளைச் சூட்டி, (பல) வலிய ராவணன்
அன்பொடு பணிந்து பூசித்த சிவலிங்கமாம் (மகாபலேசுரரை)
பூமியில் (கோகர்ணத்தில்) வைத்தவரும், மூன்று கண்களை
உடையவரும் ஆன விநாயக மூர்த்தி துணை புரிவார்

(1) ஹம்ஸத்வனி — வேல் விருத்தம்-1 — கண்ட சாபு

மகரம் அளறிடை புரள, உரககண பண மவுலி
மதியும் இரவியும் மலையவே

வளர் எழிலி குடர் உழல, இமையவர்கள் துயர் அகல,
மகிழ்வு பெறும், அறு சிறையவான்

சிகர வரை, மனை, மறுகு தொறு, நுளைய மகளிர். செழு
செநெல்களொடு தரளம் இடவே

செக சிர பகிரதி முதல் நதிகள் கதி பெற, உததி
திடர் அடைய, நுகரும் வடிவேல்

தகர(ம்) மிருகமதம் என, மணம் மருவு, கட களிறு
தரு, கவுளும் உறு வள் எயிறும்

தழை செவியும் நுதல் விழியும் உடைய ஒரு கடவுள், மகிழ்
தரு துணைவன், அமரர் குயிலும்



வேல் விருத்தம்-1

மகர மீன்கள்-(வேலின் வெம்மையால் நீர் வற்றிய) அளறிடை புரள-
சேற்றில் புரளவும், (அதனால் பாதலம் தெரிய)- அங்கு உள்ள
உரகம்- ஆதிசேடனுடைய (கண பண மவுலி) கூட்டமான பணமகு
டங்களின் உச்சியை, சந்திரனும் சூரியனும் (மலைய) தாக்கவும்
மேலோங்கி வரும் மேகங்களின், உட்பாகங்கள் சுழற்சியுறவும்
தேவர்களின் வருத்தங்கள் நீங்கவும், மகிழ்ச்சி பெற்றவையும்.
(இந்திரனால்) தமது சிறகுகள் அறுபட்டனவான
(சிகர வரை தொறு, மனை தொறு, மறுகு தொறு) சிகரங்களை உடைய
மலையகம் தோறும், வீடுகள் தோறும், தெருக்கள் தோறும் (நுளைய
மகளிர்) நெய்தல் நில- கடற்கரையில் குடியிருக்கும் பெண்கள், செழிப்
பான செந்நெல்களோடு, (தரளம்) முத்துக்களையும் உலையில் இடும்படியாக வும்
உலகில் தலைமை பெற்றுள்ள கங்கா நதி முதலிய ஆறுகள் தடை
பெறாது முன் போல் ஓடவும், கடல் நீர் வற்றி மேடாம்படி, கடல்
நீரை உறிஞ்சி உண்ட கூரிய வேல் ஆகும்
வாசனைச் சாந்து, கஸ்தூரி போல் நறுமணம் கமழும் (கட களிறு தரு)
மதநீர்ப் பெருக்கைத் தருகின்ற (கவுளும்) கன்னத்தையும், (உறு)
பொருந்தியுள்ள (வள்) வலிமையும் வளமும் கொண்ட தந்தங்களையும்
தழைந்து விரிந்துள்ள காதுகளையும், நெற்றிக் கண்ணையும் உடைய
(ஒரு) ஒப்பற்ற விநாயகக் கடவுள் (மகிழ் தரு) மகிழ்ச்சி கொள்ளும்
சகோதரன், தேவர்களால் வளர்க்கப் பெற்ற குயில் போன்ற
மொழியை உடைய தேவசேனை

குரமலை, எயினர் குல மடமயிலும் என இருவர்
குயமொடு அமர் புரியு முருகன்
குமரன், அறுமுகன், எதிரும் விருது நிசிசரர் அணிகள்
குலைய விடு கொடிய வேலே.



குகைகளை உடைய வள்ளிமலையில் வாழ்ந்த, வேடர் குலத்தில்
வளர்ந்த, இள மயில் போன்ற வள்ளிநாயகி என்ற இருவர்க
ளின் கொங்கைகளுடன் போர் புரியும் முருகவேள்
குமரமூர்த்தி, ஆறுமுக அண்ணல், தன்னை எதிர்த்து (விருது)
வெற்றிச் சின்னங்களுடன் வந்த அசுரர்களின் படை
வகுப்புகள் குலைபட்டழிய பிரயோகித்த கடுமை வாய்ந்த வேலே.

① ஜம்பைத்வனி    மயில் விருத்தம் - 1    கண்டசாபு

சந்தான புஷ்ப பரிமள கிண்கிணீ முகச்
சரண யுகள, அமிர்த ப்ரபா
சந்த்ர சேகர, மூஷிக ஆரூட, வெகு மோக
சத்ய ப்ரிய ஆலிங்கன
சிந்தாமணிக், கலச கர, கட கபோல, த்ரி
யம்பக விநாயகன், முதற்

சிவனை வலம் வரும் அளவில், உலகடைய நொடியில் வரு
சித்ரக் கலாப மயிலாம்

மந்தாகினிப் பிரபவ, தரங்க விதரங்க,
வன சரோதய, கிர்த்திகா

கற்பக விருக்ஷங்கள் ஐந்தனுள் ஒன்றாகிய 'சந்தானம்' என்னும் விரு
க்ஷத்தின் மலர்களின் நறுமணம் வீசும், பாத கிண்கிணி
இடம் கொண்ட, திருவடிகள் இரண்டெனும் அமுத ஒளி கொண்ட வரும்
பிறை மதியைச் சூடியவரும், பெருச்சாளி மீது ஏறி வருபவரும்,
மிக்க விருப்பத்துடன் சத்தியத்தையே தழுவிக் கொண்டிருப்பவரும்
சிந்தாமணியைப் போல சிந்தித்ததை தருபவரும், (அம்மையப்பரை
பூசிப்பதற்காகக்) கலசத்தை ஏந்திய திருக்கரத்தினரும்,
மதம் பொழியும் கன்னத்தை உடையவரும், மூன்று கண்களைக்
கொண்டவரும் ஆகிய விநாயக மூர்த்தி, முன்பு ஒரு நாள்
சிவபெருமானை வலம் வந்த நேரத்துக்குள், சகல உலகங்
களையும் நொடிப் பொழுதில் வலம் வந்த அழகிய தோகை
மயில் ஆகும்.

கங்கையாற்றில் (பிரபவ) தோன்றியவன்; (தரங்கம்) மனக் கவலை
களை (விதரங்க) பிளந்தெறிபவன், (வள்ளிமலைக்) காட்டில்
வேடனாய்த் தோன்றியவன்; கார்த்திகை மாதர்களின்

(7)

வர புத்ர, ராஜீவ பரியங்க, தந்தி அ
வர அசலன், குலிசாயுதத்து

இந்த்ராணி மாங்கல்ய தந்து ரக்ஷாபரண
இகல் வேல் விநோதன், அருள் கூர்

இமைய கிரி குமரி மகன் ஏறும் நீல க்ரீவ
ரத்னக் கலாப மயிலே.

(7)

சிரேஷ்டமான குமாரன், (ராஜீவ) தாமரை மலரை (பரியங்க) துயிலிடமாக (கட்டிலாகக்) கொண்டவன்; (தந்தி) யாம்பின் உருவமுள்ள. (அ) அந்த சிரேஷ்டமான மலையாகிய திருச்செங் கோட்டில் வாழ்பவன்; குலிசப்படை (வஜ்ஜிராயுதத்தைக்) கொண்ட (இந்திரனுடைய மனைவியாகிய),

சசி தேவியின் திருமாங்கல்யத்துடன் கூடிய. (தந்து) தாலி காத்துத் தாங்கிய, (இகல்) வலிமை வாய்ந்த வேல் ஏந்திய அழகன்; அருள் மிக்க

இமய மலை அரசனது மகளாகிய பார்வதியின் மகனாகிய (குமாரனாகிய) முருகவேள் ஏறுகின்ற நீல நிறக் கழுத்தை உடைய ரத்னமயமான தோகையை உடைய மயிலே.

---

(1) ஹம்ஸத்வனி　　சேவல் விருத்தம்-1　　கண்ட சாபு

உலகில் அநுதினமும் வரும் அடியவர்கள் இடர் அகல
உரிய பரகதி தெரியவே
உரக மணி என உழலும் இரு வினையும் முறைபடவும்
இருள்கள் மிடி கெட　　அருளியே

கலகம் இடும் அலகை குறள் மிகு பிணிகள் வலிமையொடு
கடினம் உற வரில், அவைகளைக்
கண்ணைப் பிடுங்கி உடல் தன்னைப் பிளந்து, சிற
கைக் கொட்டி நின்று ஆடுமாம்

## சேவல் விருத்தம் - 1

உலகில் நாள் தோறும் வருகின்ற அடியார்கள் இடர் நீங்கித் தக்கதான மேலாங் கதியை அறியும்படி வைத்தும் (மணி உரகம்) ரத்னமேந்தும் பாம்பு போலத் திரிந்து அச்சம் தந்து வரும் நல்வினை தீவினை எனும் இரு வினைகளும் முறைபட்டு ஒப்பாக ஆணவ இருளும் - அஞ்ஞான இருள்களும், வறுமையும் தொலையும்படி அருளியும்

வேதனை தரும் பேய்கள், குட்டைப் பிசாசுகள், (விஷம்) மிக்க பாம்புகள் வலிமையொடு கொடுமை செய்ய வந்தால், அவைகளின் கண்ணைப் பறித்தும், உடலைப் பிளந்தும் வென்று தனது சிறகுகளைத் கொட்டி நின்று ஆடல் புரியும் — அது எது என்றல் —

மலைகள் நெறு நெறு நெறு என, அலைகள் சுவறிட, அசுரர்
மடிய, அயில் கடவு முருகன்
மகுட வட கிரி அலைய, மலைமுலை வநிதை, குற
வரிசை இன மகள் அவளுடன்

இலை குலிசன் மகள் மருவு புயன் - இலகு சரவணச்
சிறுவன், அயன் வெருவ. விரகிற

சிரமிசையில் வெகு சினமொடு அடி உதவும் அறுமுகவன்
சேவல் திருத்துவசமே.

(8)

மலைகள் நெறு நெறு நெறு என்று பொடிபட, கடல்கள் வற்றிப்
போக, அசுரர்கள் இறக்க, வேலாயுதத்தைச் செலுத்திய முருகன்,
சிகரங்களை உடைய மேரு அலைவுறும்படி, அதனொடு எதிர்த்துப்
பொரவல்ல கொங்கைகளை உடைய பெண், குறவர்களின்
(இசை இனம்) புகழ் பெற்ற கூட்டத்தில் வந்த மகள் - ஆகிய வள்ளியும்
வில்லும், வஜ்ஜிராயுதமும் உடைய இந்திரனுடைய மகளாகிய
தேவசேனையும் அணைகின்ற திருப்புயங்களை உடையவன், விளங்கும்
சரவணப் பொய்கையில் வந்த சிறுவன், பிரமன் அஞ்சும்படி.
சாமர்த்தியத்துடன்
(அவனது) தலைமேல், மிக்க கோபத்துடன், அடித்துக்குட்டின
ஆறுமுகவன் - ஆகிய முருகவேளின் அழகிய கொடியாக
விளங்கும் சேவல் தான் அது.

(2) <u>மோகனம்</u> <u>வேல் விருத்தம் - 2</u> <u>கண்ட சாபு</u>

வெம் காள கண்டர் கைச் சூலமும், திருமாயன்
வெற்றி பெறு சுடர் ஆழியும்
விபுதர் பதி குலிசமும், சூரன் குலம் கல்லி
வெல்லா எனக் கருதியே

சங்க்ராம நீ சயித்து அருள் எனத் தேவரும்
சதுர்முகனும் நின்று இரப்ப

<u>வேல் விருத்தம் - 2</u>

கொடிய விஷத்தை ஏந்தின கழுத்தினராகிய சிவனது திருக்கையில்
உள்ள சூலாயுதமும், அழகிய திருமாலது ஜெயம் பெறும் ஒளி வீசு சக்கரமும்
தேவர்களுக்குத் தலைவனை இந்திரனுடைய வஜ்ஜி
ராயுதமும், சூரனையும், அவனுடைய குலத்தினரையும்
(கல்லி) அடியோடு பெயர்த்து அழித்து வெல்லும் தரத்தன
அல்ல என்று எண்ணியே
போர் வீரனே! நீ (சென்று) ஜெயித்து வந்தருள் என்று
தேவர்களும், பிரமனும் நின்று வேண்டிக் கொள்ள

(9)

சயிலமொடு சூரன் உடல் அரு நொடியில் உருவியே
தனி ஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி. வாராகி இந்த்ராணி
கௌமாரி. கமலாசனக்

கன்னி. நாரணி. குமரி. த்ரிபுரை. பயிரவி. அமலை
கௌரி, காமாக்ஷி. சைவ

சிங்காரி, யாமளை பவாநி கார்த்திகை. கொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச்
சிறுவன் அறுமுகன், முருகன், நிருதர்கள் குலாந்தகன்
செம்பொற் திருக்கை வேலே.

(9)

ஏழு கிரிகளுடன் சூரனுடைய உடலை அரு நொடிப் பொழுதில்
உருவிச் சென்று, ஒப்பற்ற வீர வலிமையைக் கொண்ட நீண்ட வேல் ஆகும்.
எலும்பு மாலையை அணிந்தவள், துர்க்கா தேவி, வராக அவதாரத்தின்
சக்தி, இந்திர சக்தி. குமார மூர்த்தியின் சக்தி. தாமரையை
இருப்பிடமாகக் கொண்டுள்ள
கன்னிப் பருவம் மாறாதவள், காத்தல் தொழிலை நடத்தும் வைஷ்ணவி,
என்றும் இளையவள், மூன்று உலகங்கட்கும் தலைவி. பயிரவ
மூர்த்தியின் சக்தி, மலமற்றவள், பொன்னிறம் படைத்தவள்,
விரும்பியதை வழங்கும் கண்களை உடையவள், சிவ சம்பந்தம் உடைய
அழகி, பச்சை நிறமுடையவள், பவாநி, (கார்த்திகை) துர்க்கை,
(கொற்றி) வெற்றிக்கு உரிய துர்க்கை, முக்கண்ணி அளித்த செல்வம்
மகன். ஆறுமுகன். முருகன், அசுரர்களின் குலத்துக்கு நிறைந்த
யமன் போன்றவன் — ஆகிய கந்தப் பெருமானது சிவந்த
அழகிய திருக்கரத்தில் விளங்கும் வேலாயுதமே.

(2) மோஹனம் — மயில் விருத்தம்-2 — கண்ட சாபு

சக்ர ப்ரசண்ட கிரி முட்டக் கிழிந்து, வெளி
பட்டு, க்ரவுஞ்ச சயிலம்
தகரப், பெருங் கனக சிகரச் சிலம்பும், எழு
தனி வெற்பும், அம்புவியும், எண்

திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்க வரு
சித்ரப் பதம் பெயரவே

மயில் விருத்தம்-2

சக்ரவாளம் என்கின்ற வலிய மலை அடியோடு பிளந்து வெளியில்
சிதறவும், கிரவுஞ்ச மலை
பொடிபடவும், பெரிய பொன் மயமான சிகரங்களையுடைய
(சிலம்பும்) மேரு மலையும். (தனி) ஒப்பற்ற ஏழு கிரிகளும்,
பூலோகமும், எட்டுத்
திக்குகளில் உள்ள பரந்த மலைகளும், ஒன்று போலக் குலுங்கும்படி
வருகின்ற, அழகிய அடிகள் இடம் விட்டு நீங்க- அடி எடுத்து வைக்க

சேடன் முடி திண்டாட ஆடல் புரி வெஞ் சூரர்
திடுக்கிட நடிக்கு மயிலாம்
பக்கத்தில் ஒன்றுபடு பச்சைப் பசுங் கவுரி
பத்மப் பதம், கமழ் தரும்

பாகீரதிச் சடில யோகீசுரர்க்(கு) உரிய
பரம உபதேசம் / அறிவிக்

கைக்குச், செழும் சரவணத்திற் பிறந்த ஒரு
கந்தச் சுவாமி தணிகைக்
கல்வரை கிரி உருக வரு கிரண மரகத
கலாபத்தில் இலகு மயிலே



ஆதிசேடனுடைய தலைகள் கலக்கமுற, போர் புரியும்.
கொடியஅசுரர்கள் திடுக்கிடும்படி நடனம் செய்கின்ற மயில் ஆகும்
தமது ஒரு பாகத்தில் பொருந்தியுள்ள, மிகுந்த பச்சை
நிறம் கொண்ட பார்வதி தேவியின். தாமரையன்ன திருவடி
மணம் வீசுகின்ற,
கங்காநதி சேர்ந்துள்ள சடாமுடியையும் உடைய யோகி
சுரராம் சிவபெருமானுக்கு ஏற்றதான மகா மேன்மையான
உபதேசத்தை, (அறிவிக்கைக்கு) தெரிவிப்பதற்கு
செழுமை வாய்ந்த சரவணப் பொய்கையில் உதித்த ஒப்புற்ற
கந்த சுவாமி, திருத்தணிகை எனப்படும்
செங்கழுநீர்மலை உருகும்படி (வரு) வீசுகின்ற ஒளியை
யுடையதும், பச்சை நிறத்ததுமான தோகைகளைக் கொண்டு
விளங்கும் மயிலே.

② மோகனம் சேவல் விருத்தம்- 2 க-சாபு

எரி அனைய வியன் நவிரம் உள கழுது, பல பிரம
ராட்சதர்கள் மிண்டுகள் செயும்
ஏவற் பசாசு நணி பேயிற் பசாசு, கொலை
எனப் பசாசுகளையும்
கரி முருடு பெரிய மலை பணை எனவும், முனையின், உயர்
ககனமுற நிமிரும், வெங்கட்

சேவல் விருத்தம்- 2

நெருப்புப் போன்ற விரிந்த (நவிரம்) மயிர்களையுடைய பேய்கள்,
பல வகைப்பட்ட பிரம ராட்சதர்கள், வேதனைக் குறும்புகள் செய்யும்
பகைவரால் ஏவப்பட்ட பிசாசுகள், மிகுந்த பேய் பிசாசுகள்,
கொலை புரிய வல்ல இழிந்த பிசாசுகளையும்
கருநிறமும், கரடு முரடும் கொண்ட பெரிய மலை போலவும்,
(பணை) மூங்கில் போலவும், (முனையின்) வேண்டுமானால் உயர்ந்த
ஆகாய அளவுக்கு வளர வல்லனவும், கொடிய கண்களை
உடையனவுமான

கடிகளையும் மட மடென மறுகி அலறிட உகிர்க்
கரத்து அடர்த்துக் கொத்துமாம்
தரணி பல இடம் என், வன மத கரிகள் தறிகள் பணி
சமணர் கிடு கிடென நடனம்

தண்டைகள் சிலம்புகள் கலின் கலின் எனச் சிறிய
சரண அழகொடு புரியும் வேள்
திரிபுரம் அது எரிய நகை புரியும் இறையவன், மறைகள்
தெரியும் அரன் உதவு குமரன்
திமிர தினகர முருக சரவணபவன் குகன்
சேவற் திருத்துவசமே.



பேய்கள் ஆகிய இவைகள், மட மட என்று சுழன்று அலறும்படி
தனது கை நகங்களாற் பிடுங்கிக் கொத்தும்.
மலைகள் பலவற்றை இடமாகக் கொண்டு, மதம் பிடித்த காட்டானை
களும். தூண்களும் இவர்கட்கு முன் தாம் எம்மாத்திரம் என்று
பணியும்படியுள்ள. சமணர்கள் கிடு கிடு என்று அஞ்சும்படி, நடனத்தை
தண்டைகளும் சிலம்புகளும் கலின் கலின் என்று ஒலிக்கத், தனது
சிறிய திருவடியின் அழகுடன் புரியும் செவ்வேள்
திரிபுரங்கள் எரிந்து விழச் சிரித்த இறைவன், வேதங்கள் அறிந்து
போற்றும் சிவபெருமான் பெற்ற குமர மூர்த்தி
(ஆணவ, அஞ்ஞான) இருளை நீக்கும் ஞான சூரியன், முருகன்,
சரவண பவன், குகமூர்த்தி ஆகிய முருகப் பெருமானுடைய, அழகிய
கொடியாக விளங்கும் சேவல்.

(3) சாரங்கா வேல் விருத்தம்-3 கண்ட சாபு

வேதாள பூதமொடு காளி காளாத்ரிகளும்
வெகுளுறு பசாச கணமும்

வெங்கழுகுடன், கொடி, பருந்து செம்புவனத்தில்
வெம்பசி ஒழிக்க வந்தே

ஆதார கமடமும் கண பண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்

## வேல் விருத்தம்-3

பிசாசு, பூதம் இவைகளுடன், காளி, காளாத்ரி எனப் பெயர் பெற்ற
விஷப்பற்களை உடைய பாம்பு போல, வெகுளுறு - (பசிக்கு உணவு
கிடைக்கவில்லையே என்று) கோபம் கொள்ளும். பேயக் கூட்டங்களும்
கொடிய கழுகுகளுடன், (கொடி) காக்கைகளும், பருந்துகளும்,
ரத்தத்தாற் சிவந்த பூதலத்தே, தமது கொடிய பசியை ஒழிக்கும்
பொருட்டு வந்து,
ஆதாரமாய் மந்த்ர மலையைத் தாங்கின (கமடமும்) ஆமையும்,
(கணபணம்) - (பூமியைத் தாங்கும்) கூட்டமான படங்களை உடைய
(வியாளமும்) பாம்பும், தமது பாரச் சுமையிற் கொண்டுள்ள விசாலமான
மலைகளில் எல்லாம்

அலைய நடமிடும் நெடுந் தானவர், நிணத்தசை
அருந்திப் புரந்த வை வேல்

தாது ஆர் மலர்ச்சுனை பழநி மலை சோலைமலை
தனிப் பரங்குன்று, ஏரகம்

தணிகை, செந்தூர், இடைக்கழி, ஆவினன்குடி
தடம் கடல் இலங்கை அதனில்
போது ஆர், பொழிற், கதிர்காமத் தலத்தினைப்
புகழும் அவர் அவர் நாவினில்

பூந்தியில் அமர்ந்தவன் கந்தன் முருகன் குகன்
புங்கவன் செம் கை வேலே.

அலைந்து திரிந்து உலவின, பெரிய அசுரர் கூட்டங்களின்
மாமிசச் சதைகளை உண்டு, (புரந்த) - (தேவர்களைக்) காத்த
ருளிய. (வை) கூரிய, வேல் ஆகும்
பூந்தாதுகள் நிறைந்த மலர்களைத் தரும் சுனைகளையுடைய
பழநிமலை, பழமுதிர்சோலை, (தனி) ஒப்பற்ற திருப்பரங்குன்றம்,
திருவேரகம்
திருத்தணிகை, திருச்செந்தூர், திருவிடைக்கழி, திருவாவினன்
குடி, பெரிய கடலால் சூழப்பட்ட இலங்கையில்
மலர்கள் நிறைந்த, சோலைகள் சூழ்ந்த, கதிர்காமம் ஆகிய
திருத்தலங்களைப் போற்றித் துதிக்கும் அந்த அந்த அடியவர்
களின் நாவிலும்
அறிவினிலும்-மனத்திலும் வீற்றிருப்பவன், கந்தன், முருகன்,
குகன், பரிசுத்தனுமாகிய கடவுளின் செவ்விய திருக்கரத்
தில் விளங்கும் வேலாயுதமே.

(3) சாரங்கா — மயில் விருத்தம்-3 — கண்டசாபு

ஆதார பாதளம் பெயர, அடி பெயர, மூ
தண்ட முகடது பெயரவே
ஆடு அரவ முடி பெயர, எண் திசைகள் பெயர, எறி
கவுட். கிரி சரம் பெயரவே

மயில் விருத்தம்-3

ஆதாரமாயிருக்கின்ற பாதாள பூமியே அசையவும், அடியெடுத்து வைப்
பதால், பழமையான பிரமாண்டத்தின் உச்சியே அசையவும்
ஆடுகின்ற ஆதிசேடனுடைய முடிகள் அசையவும், எட்டுத் திக்குகளும்
அசைவுறவும், (எறி) வீசி வெளி வருகின்ற (கவுள்) மதம் பாயும்
இடத்தைக் கொண்ட, (கிரி சரம்) அஷ்ட திக் கஜங்கள் கலங்கி
இடத்தை விட்டு நீங்கவும்

வேதாள தாளங்களுக்(கு) இசைய ஆடுவார்
மிக்க ப்ரியப்பட, விடா
விழி, பவுரி, கவுரி கண்டு, உள மகிழ, விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்

பேய்களின் தாளங்களுக்கு பொருந்த நடனம் புரியும் நடராஜப்
பெருமான், அதிக ஆசைப்படவும். (விடா விழி(யுடன்)-
விடாது-வைத்த கண் வைத்தபடியே-அங்கு இங்கு விட்டு நீங்காத
கண்களுடன், (பவுரி) தனது கூத்தை-நடனத்தை, பார்வதி
தேவி கண்டு, மனம் மகிழும்படியும், விளையாடுகின்ற, பல திறப்
பட்டு விரிந்த நடனங்களைச் செய்யும் மயிலாகும்-

மாதாநுபங்கியெனும் மால் அது சகோதரி,
மகீதரி, கிராத குலி, மா
மறை முநி குமாரி, சாரங்க(ம்) நம், தனி வந்த
வள்ளி, மணி நூபுர மலர்ப்

மாதாநுபங்கி எனும் திருவள்ளுவராக வந்த பிரமன் என்னும்.
மால்- பெருமை உடையோனது தங்கை, மலையிடத்துப் பெண்,
வேடர் குலப் பெண், (மா) சிறந்த
வேதம் வல்ல சிவ முநிவரின் குமாரி. (சாரங்கம்) மானிடத்திடமி
ருந்து, (தனி) ஒப்பற்ற முறையில் வந்து தோன்றிய, நம் வள்ளி-
நமது வள்ளி பிராட்டியின், (மணி நூபுர) இரத்தினச் சிலம்பு
அணிந்ததும், தாமரை மலர் போன்றதுமாகிய

பாதார விந்த சேகர(ன்), நேயம் மலரும், உற்
பல கிரி அமர்ந்த பெருமான்

பாத அரவிந்த சேகரன்- பாத தாமரையை முடியிற் சூடிய முருகப்
பெருமானுக்கு, பிரியம் தருவதாய் மலர்கின்ற, நீலோற்பலங்கள்
உள்ள (கிரி) தணிகை மலையில் வீற்றிருக்கின்ற பெருமான்,

படை நிருதர் கடகம் உடைபட நடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே

படைகளுடன் வந்த அசுரர்களுடைய (கடகம்) சேனைகள் எல்லாம்
அடியுண்டு சிதறுமாறு நடத்தின மிகுந்த பச்சைக் கலாபத்தை
யுடைய வெற்றி மயிலே.

---

(3) சாரங்கா — சேவல் விருத்தம்-3 — கண்ட சாபு

கரி முரட்டடி, வலைக் கயிறு எடுத்து, எயிறு பற்
களை இறுக்கியும் முறைத்து

சேவல் விருத்தம்-3

கரு நிறத்துடனும், முரட்டுத் தனத்துடனும், பாச வலைக் கயிற்றுடனும்
வந்து, எல்லாப் பற்களையும் கடித்து, முறைத்துப் பார்த்து

கலகம் இட்டு இயமன் முற் கரம் உறத் தொடரும் அக்
காலத்தில் வேலும் மயிலும்
குருபரக் குகனும் அப்பொழுதில் நட்புடன் வரக்
குரல் உவித்து அடியார் இடரை
குலைத்து, அவுணு மூக்கிற. சினப் பேய்களைக், கொத்தி,
வட்டத்தில் முட்ட வருமாம்

அரிய கொற்கையன் உடற் கருகும் வெப்பகையை. உற்
பனம் உரைத்து, அதம் மிகவும் மே(வும்)

அமணரைக் கழுவில் வைத்தவரும், மெய்ப் பொடி தரித்து
அவனி மெய்த்திட அருள் அது ஆர்

செபுரத்து அவதரித்த அமுதத் திணமணிச்
சிவிகை பெற்று இனிய தமிழை

சிவன் நயப்பு உற விரித்து உரை செய் விற்பனன் இகல்
சேவற் திருத் துவசமே.

(14)

கலக்கம் உறச் செய்து யமன் என் முன்பு தொட்டுத் தொடரும்
அந்த முடிவு காலத்தில், வேலும். மயிலும்
குருபரனும், குகனும் அப்பொழுது அன்புடன் எதிர் வரும்படி
குரல் கொண்டு கூவி அழைத்து. அடியார்களின் வருத்தத்தை
சிதற வைத்தும், (சினப் பேய்களை) சினம் கொண்ட பேய்களை,
(அவுணு மூக்கிற) கூச்சலிடும் மூக்கினைக் கொத்தி, வட்டமிட்டு
முட்டுவதற்கு வரும் - வந்து அருள் புரியும்.
அருமை வாய்ந்த(கூன்)பாண்டியனது உடல் கருகும்படி காய்ந்த
வெப்புச் சுரமாம் பகையின் (உற்பனம்) மூல - அடிப்படைக்
காரணத்தை வெளியிட்டு உரைத்தவரும், (அதம்) கீழ்மைக்
குணத்தை அதிகமாகக் கொண்ட (அவ்) கெடுதற் செய்கை
கள் பலவும் (ஏவு) செலுத்தின
சமணர்களைக் கழுவில் ஏற்றினவரும், உண்மைத் திருநீற்றை
பலரும் அணியும்படி செய்தவரும், உலகு உண்மை கண்டு உய்ய
அருள் நிரம்பப் பாவித்தவரும்
சீகாழியில் அவதரித்தவரும், அந்த அமுதம் போலக் குளிர்ச்சி
தருவதும், சூரியன் போல ஒளி வீசுவதுமான (முத்துப்) பல்லக்கை
(சிவனிடம்) பெற்றவரும், இனிமையான செந்தமிழ்ப் பதிகத்தை
சிவபெருமான் விரும்பிக் கேட்க, விரிவாகப் பாடியருளின
(விற்பனன்) பெருந்தமிழ்ப் புலவருமாகிய முருகப் பெரு
மானது (இகல்) வலிமை வாய்ந்த அழகிய கொடியாகிய
சேவல்.

(4) மனோலயம்    வேல் விருத்தம்-4    ஆதி

அண்டர் உலகும் சுழல எண் திசைகளும் சுழல
அங்கியும் உடன் சுழலவே
அலைகடல்களும் சுழல அவுணர் உயிரும் சுழல
அகில தலமும் சுழலவே
மண்டலம் நிறைந்த ரவி, சத கோடி மதி, உதிரம்
மாணப் பிறங்கி, அணியும்

மணி ஒலியினிற் சகல தலமும் மருளச், சிரம
வகை வகையினிற் சுழலும் வேல்
தண்டம் உடனுடன், கொடிய பாசமுடனும், கரிய
சந்தமுடனும், பிறைகள் போல்
தந்தம் உடனுடன், தழலும், வெம் க(ண்)ணுடனும் பகடு
தன்புறம் வரும் சமனை, யான்
கண்டு குலையும் பொழுதில் அஞ்சல் என
மென் சரண கஞ்சம் உதவும் கருணை வேள்

கந்தன் முருகன் குமரன் வண் குறவர் தம் புதல்வி
கணவன் அடல் கொண்ட வேலே.



வேல் விருத்தம்-4

தேவலோகம் சுழலவும், எட்டுத் திசைகளும் சுழலவும், அக்கினி
தேவனும் அவைகளுடன் சுழலவும்
அலைவீசும் கடல்கள் சுழலவும், அசுரர்களின் உயிர்கள் சுழலவும்
எல்லா உலகங்களும் சுழலவும்
வட்ட வடிவம் பூரணமாயுள்ள சூரியன், நூறு கோடி சந்திரன் இவை
களின் நிறமும் ஒளியும் கொண்டு, (அசுரர்களின்) உதிரம்-ரத்தம்
(மாணப் பிறங்கி) நிறைந்து விளங்க, அணிந்துள்ள
மணிகளின் ஒலியில், எல்லா உலகங்களும் அச்சம் கொள்ள
(சிரம) ஆயுதப் பயிற்சி செய்யும் வகையில் சுழன்று சென்றும் வேல்.
தண்டாயுதத்துடனும், கொடிய பாசக் கயிற்றுடனும், கரு நிறமான
வடிவுடனும், பிறைச் சந்திரன் போன்ற
பற்களுடனும், எரி வீசும் வெப்பமான கண்களுடனும், எருமை
யின் முதுகின் மேல் வருகின்ற யமனை, நான்
பார்த்து உள்ளம் நடுங்கிச் சோர்வு கொள்ளும் போது, பயப்ப
டாதே என்று மெல்லிய திருவடித்தாமரையை எனக்கு அருளும்
கருணை வாய்ந்த செவ்வேள்,
கந்தன், முருகன், குமரன், வளப்பம் பொருந்திய குறவர்க
ளின் மகள் வள்ளியின் நாயகன் ஆகிய இறைவனுடைய
வலிமையும், வெற்றியும் கொண்ட வேலாயுதமே.

(4) மனோலயம் மயில் விருத்தம்-4 ஆதி

யுககோடி முடிவின் மண்டிய சண்டமாருதம்,
உதித்தது என்று அயன் அஞ்சவே
ஒருகோடி அண்டர் அண்டங்களும். பாதாள
லோகமும் பொற் குவடு உறும்
பெருகோடி மலைகளும், அடியினில் தகர்ந்து, இரு
விசும்பிற் பறக்க, விரிநீர்

வேலை சுவறச், சுரர் நடுக்கம் கொளச், சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நக கோடி கொண்டு அவுணர் நெஞ்சம் பிளந்த
நரகேசரி முராரி திருமால்

நாரணன் கேசவன் சிதரன் தேவகீ
நந்தனன், முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகு ஒடி அநவரதம்
முகில் உலவு நீலகிரி வாழ்

முருகன் உமை குமரன் அறுமுகன். நடவு விகட தட
மூரிக் கலாப மயிலே



மயில் விருத்தம்-4

யுகங்களின் எல்லை முடிவிலே, நெருங்கி வரும் பெருங்காற்று
தான், வந்து தோன்றியுளது என எண்ணி. பிரமன் அஞ்சவும்
கோடிக் கணக்கான தேவர்களின் அண்டங்களும். பாதாள
உலகமும், பொன் மயமான சிகரங்களைக் கொண்ட
பல கோடி மலைகளும், (மயில்) அடி எடுத்து வைத்துப் போகும்
போது, நொறுங்கி, (இரு) பெரிய ஆகாயத்தில் பறந்து போக
வும் - பறந்து சிதறுண்ணவும். விரிந்த நீர்ப்பரப்பை உடைய
கடல் வற்றிப் போகவும், தேவர்கள் நடுங்கி அஞ்சவும். தனது
சிறகுகளை வீசிப் பறக்கின்ற மயிலாகும்
கோடிக் கணக்கான நகங்களைக் கொண்டு இரணியன் முதலிய
அசுரர்களின் நெஞ்சத்தை பிளந்த நரசிங்கமூர்த்தி, முரன் என்ற
அசுரனுக்குப் பகைவனயிருந்த மூர்த்தி- முரனைக் கொன்றவன். திருமால்
நாரணன், கேசவன், லக்ஷ்மியை மார்பில் தரித்தவன், தேவகியின்
குமாரன், முகுந்தன் ஆகிய திருமாலின் மருகனை
பலமுகங்களாகப் பரந்து செல்லும் கங்கை தாங்கிய ஜோதி,
(குருகு) வெண்ணிறத்துடன் பரவிச்சென்று. எப்போதும் மேகங்
கள் உலவுகின்ற, நீலோற்பலம் மலர்கின்ற திருத்தணிகை
மலை மேல் வாழ்கின்ற
முருகன். உமாதேவியின் குமாரன், ஆறுமுகன் (நடவு)
செலுத்துகின்ற. (விகட) அழகுள்ள. (தட) பெருமை
வாய்ந்த (மூரி) வலிமை வாய்ந்த. தோகைகளைக் கொண்ட
மயிலே.

(4) மனோலயம் — சேவல் விருத்தம்-4 — ஆதி

அச்சப்படக் குரல் முழக்கிப் பகட்டி அலறிக்,
கொட்டம் இட்டு அமர் இடும்
அற்பக் குறப் பலிகள் வெட்டுக்கள் பட்டு கடி
அறு குழைகளைக் கொத்தியே
பிச்சுச் சினத்து உதறி, எட்டுத் திசைப் பலிகள்
இட்டுக் கொதித்து விறலே
பெற்றுச் சுடர்ச் சிறகு தட்டிக் குதித்து இயல்
பெறக், கொக்கரித்து வருமாம்.
பொய்ச் சித்திரப் பலவும் உட்கத் திரைச் சலதி
பொற்றைக் கறுத்து அயில் விடும்

புத்தி ப்ரியத்தன், பெகு வித்தைக் குணக்கடல்
புகழ் செட்டி சுப்ரமணியன்

செச்சைப் புயத்தன் நவ ரத்ன க்ரிடத்தன், மொழி
தித்திக்கு முத்தமிழினை
தெரிய வரு பொதிகை மலை முனிவர்க்கு உரைத்தவன்
சேவற் திருத் துவசமே.



சேவல் விருத்தம்-4

பகைவர்கள் அஞ்சும்படி குரலை எழுப்பி, (பகட்டி) வெருட்டி, பெருங்
கூச்சலிட்டு, ஆரவாரத்துடன் போர் செய்யும்
அற்பமான குறவரிடும் பலிகளில் வெட்டுண்டு அவை கடித்திருந்த
இலை தழைகள் அறுபட்டு விழுந்தவைகளைக் கொத்தியும்
பிய்த்துக் கோபத்துடன் உதறியும், எட்டுத் திசைகளிலும் பலியிடுவது
போல் கோபித்தும், வீரத்தைப்
பெற்று, ஒளி வீசும் தனது சிறகுகளைப் புடைத்தும், குதித்தும்,
(இயல் பெற) ஒழுங்குடன், கொக்கரித்து வரும்.
பொய்யான, கற்பனையான, செயல்கள் பலவும் அச்சமடையவும்,
அலை வீசும் கடல் மீதும், கிரௌஞ்சகிரி மீதும் கோபித்து வேலாயு
தத்தைப் பிரயோகித்த
அறிவும் அன்பும் பூண்டவன், சகல கலைகளிலும் குணத்திலும்
கடல் போன்றவன், புகழ் நிரம்பின செட்டி, சுப்ரமண்யன் எனப்
பெயர் பூண்டவன்
வெட்சி மாலையை அணிந்த திருப்புயங்களை உடையவன், நவரத்னங்கள்
இழைத்த கிரீடத்தைத் தரித்தவன், மொழிகள் இனிப்பதான முத்தமிழை
தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்த பொதிகைமலை முனிவராம்
அகத்தியர்க்குப் போதித்தவன் ஆகிய முருகவேளின் அழகிய
கொடியாக விளங்கும் சேவல்.

(5) பாகேஸ்ரீ    **வேல் விருத்தம்-5**    கண்ட சாபு

ஆலமாய் அவுணருக்கு, அமரருக்கு அமுதமாய்
ஆதவனின் வெம்மை தனி மீது

அரிய தவ முனிவருக்கு இந்துவிற தண் என்று
அமைந்து அன்பருக்கு முற்று
மூலமாம் வினை அறுத்து, அவர்கள் வெம் பகையினை
முடித்து, இந்திரர்க்கும் எட்டா
முடிவு இல் ஆநந்தம் நல்கும் பதம் அளித்து. எந்த
மூதண்டமும் புகழும் வேல்

ஏலமா யானையின் கோட்டிற் சொரி முத்தும்
இன் பணைகள் உமிழ் முத்தும்
இனி வாடை மான் மதம் அகிலோடு சந்தனம்
இலவங்க நறவம் ஆரும்
தாவம் மா மர முதல் பொருள் படைத்திடும் எயினர்
தரு வநிதை மகிழ்நன் ஐயன்

தனி நடம் புரி சமர முருகன் அறுமுகன் குகன்
சரவணக் குமரன் வேலே.



**வேல் விருத்தம்-5**

அசுரர்களுக்கு நஞ்சாகவும், தேவர்களுக்கு அமுதம் போல உதவியும், சூரியனைக் காட்டிலும் மிகுதியான வெப்பமான ஞான தனியை (மீது) மேற் கொண்டுள்ள

அருமையான தவம் செய்யும் முனிவர்களுக்கு சந்திரன் போல குளிர்ந்த தண்ணருள் பொருந்தியும், அன்பர்களுக்கு முடிவு பெறாத மூலகாரணமாய் நின்ற வினைகளை அறுத்து, அவர்களுடைய கொடிய பகை அனைத்தையும் அழித்து, இந்திரர்களுக்கும் எட்டாத முடிவே இல்லாத ஆனந்தத்தைத் தரும் பதவியை வழங்கியும் (அதனால்) எந்த- பழையதான உலகங்கள் எல்லாம் புகழ்கின்ற வேல் – எது என வினவில், அது தான்:

பொருந்திய சிறந்த யானையின், (கோடு) தந்தத்தினின்றும் உதிரும் முத்தும், இனிய தனி விடும் மூங்கில்கள் உதிர்க்கின்ற முத்தும் இனிய வாசனை வீசும் கஸ்தூரி, அகிலுடன் சந்தனம், கிராம்பு, (நறவம்) தேன் (ஆரும்) இவைகளை அனுபவிப்பவர்களும் பலா மா மரங்கள் முதலிய செல்வத்தைப் பெற்று அனுபவிப்பவர்களுமான வேடர்கள் வளர்த்த வள்ளி நாயகியின் கணவன் மேலானவன்,

ஒப்பற்ற குடைக் கூத்து- துடிக் கூத்து இவைகளை ஆடின போர் முருகன், அறுமுகவன், குக மூர்த்தி, சரவணத்தில் தோன்றிய குமாரக் கடவுளின் வேலாயுதமே.

(5) பாகேஸ்ரீ    மயில் விருத்தம்-5    கசாபு

ஜோதி,கிம வேதண்ட, கன்னிகையர் தந்த. அபி
    நய துல்ய சோம வதன

துங்க, த்ரிசூலதரி, கங்காளி. சிவகாம
    சுந்தரி பயந்த நிறை சேர்
ஆதி நெடு பூதண்ட அண்ட பகிரண்டங்கள்
    யாவுங் கொடுஞ் சிறகினில்
அணையும் தனது பேடை அண்டங்கள் என்னவே
    அணைக்கும் கலாப மயிலாம்

நீதி மறை ஓது அண்டம் முப்பத்து முக்கோடி
    நித்தரும் பரவு கிரியாம்

நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பயன்,
    நிர்வியாகுலன், சங்கு. வாள்

மாதிகிரி. கோதண்ட தண்டம் தரித்த புயன்
    மாதவன், முராரி, திருமால்

மதுகைடவாரி, திரு மருகன், முருகன் குமரன்
    வரம் உதவு வாகை மயிலே.



மயில் விருத்தம்-5

ஜோதி வடிவினளாய், கிமய மலையிடத்தே, மாதர்கள், தோழிய
ராய்ப் பாதுகாத்துத் தந்த, அலங்காரமும், பரிசுத்தமும் படைத்த
சந்திரன் போன்ற தண்ணொளி வீசும் முகமுள்ளவள்
பெருமை வாய்ந்த முத்தலைச் சூலத்தை ஏந்தினவள். எலும்பை அணிந்
தவள், சிவகாம சுந்தரி பெற்ற, வரிசையாய் அமைந்துள்ள,
பழமையான. நீண்டு பரவியுள்ள, பழமையான அண்டங்கள்,
வெளி அண்டங்கள் யாவற்றையும், தனது வளர்ந்த சிறகால்
அணைகின்ற தனது பெட்டை மயிலின், முட்டைகள் என்று சொல்
லும்படி (அண்டங்கள் யாவற்றையும்) அணைக்கின்ற தோகை
மயிலாகும்
நீதிகள் நிறைந்த வேதங்களை ஓதுகின்ற, அண்டங்களில் உள்ள
முப்பத்து முக்கோடி நித்திய சூரிகளாகிய பெரியோர்களும் புகழ்
கின்ற மலையாம்
நீலோற்பலகிரி - திருத்தணிகையில் வாசம் செய்யும் வேற்கடவுள்,
ஒரு பற்றுக்கோடும் இல்லாதவன், பயமில்லாதவன், வியாகுலம்-
கவலை இல்லாதவன், சங்கையும், (நாந்தகம்) என்னும் வாளையும்
சிறந்த சக்கரத்தையும். கோதண்டம் (சாரங்கம் என்னும்) வில்லையும்
கௌமோதகி என்னும் தண்டத்தையும் ஏந்திய திருக்கைகளை உடை
யவன், மாதவன், முராரி, திருமால்
மது. கைடவர்களை வதைத்த பெருமானுக்கும், இலட்சுமிக்கும்,
மருகன், முருகன் ஆகிய குமாரனுடைய, 'வேலும் மயிலும் துணை
என்பார்க்கு விரும்பும் வரத்தைத் தரும் வெற்றி மயிலே.

(5) பாகேஸ்ரீ    சேவல் விருத்தம்-5    கண்டசாபு

தானாய் இடும்பு செயும் மோகினி இடாகினி
தரித்த வேதாள பூதம்

சருவ தனியமும் அங்கிரியினல் உதறித்
தடிந்து சந்தோடம் உறவே
கோனகி மகவானும் வானை, வானடர்
குலவு சிறை மீள அட்ட
குலகிரிகள் அசுரர் கிளை பொடியாக வெஞ்சிறைகள்
கொட்டி எட்டிக் கூவுமாம்

மால் நாகம், அக்கு, அறுகு மான் உடையன் நிர்த்தம் இடு
மாதேவன் நற் குருபரன்

வான் நீரம் அவனி அழல் காலாய் நவக்கிரகம்
வாழ் நாள் அனைத்தும் அவனும்
சேனபதித் தலைவன் வேதாவினைச் சிறை செய்
தேவாதிகட்கு அரசு. கள்
தேனை, மைக் கடலின் மீனவற்கு, இனியன்
சேவற் திருத் துவசமே.



சேவல் விருத்தம்-5

ஒருவர் தம்மைத் தீண்டாமலே தானாகவே பிறர்க்குத் துன்பத்தைச் செய்கின்ற மோகினி. டாகினி அவையுடன் பொருந்திய பேய்கள். பூதங்கள்,

சகல விதமான துனியங்கள் ஆகிய இவைகளை (அங்கிரியினல்) (தனது) காலால் உதறிப் புடைத்தும், மகிழ்ச்சியுறும்படி (மகவானும்) இந்திரனும், தலைவனாகி, வானுலகை ஆளவும், தேவர்கள் தாம் இருந்த சிறையினின்று மீளவும், எட்டுத் திசைகளிற் சிறந்து நிற்கும் மலைகளும், அசுரர் கூட்டமும் பொடி படவும். தனது கொடிய சிறகுகளைக் கொட்டி, எட்டிக் குதித்துக் கூவும்.

பெரிய வாசுகி என்ற பாம்பையும், (அக்கு) எலும்பு (அல்லது ருத்ராக்ஷ) மாலையையும், அறுகம்புல்லையும், திருக்கரத்தில் மானையும் உடையவன், நடனம் புரியும் மகாதேவருமாகிய சிவனுக்கு நல்ல குருமூர்த்தி

ஆகாயம். நீர். பூமி. நெருப்பு. காற்று எனப்படும் பஞ்ச பூதங்கள் நவக்கிரகங்கள். வாழ்நாள் ஆகிய எல்லாம் தானானவன்

தேவ சேனபதித் தலைவன், பிரமனைச் சிறை செய்தவன் தேவாதிகளுக்கு அரசு, கள் (மதுவும்)

தேனும் போல், இருண்ட கடலில் மச்சாவதாரம் எடுத்த திருமாலுக்கு இனித்தவனை— உகந்தவனை முருகப் பெருமானின் அழகிய கொடியாகிய சேவல்.

(6) ஸிந்து பைரவி   வேல் விருத்தம்-6   கண்ட சாபு

பந்(து) ஆடலிற் கழங்(கு) ஆடலிற் சுடர் ஊசல்
பாடலினிடை ஆடலின் எலாம்
பழந் தெவ்வர் கட்கம் துணித்(து) இந்திரற்(கு) அரசு
பாலித்த திறல் புகழ்ந்தே

சந்(து) ஆரு(ம்) நாண்மலர்க் குழல் அரம்பையர்களும்
சசி மங்கை, அனையர் தாமும்


தன்னை அன்பொடு பாடி ஆடும் ப்ரதாபமும்
தலைமையும் பெற்ற வை வேல்.
மந்தாகினித் தரங்கச் சடிலருக்கு, அரிய
மந்த்ர உபதேசம் நல்கும்
வர தேசிகன் கிஞ்சுகம் சிகா அலங்கார
வாரணக் கொடி உயர்த்தோன்

கொந்து ஆர் மலர்க் கடம்பும், செச்சை மாலையும்,
குவளையும் செங்காந்தளும்
கூதாள மலரும் தொடுத்து அணியு மார்பினன்
கோலத் திருக்கை வேலே.



வேல் விருத்தம்-6

பந்தாட்டத்திலும், கழற்சிக் காய் ஆட்டத்திலும், ஒளி விடும்
ஊஞ்சல் ஆடும் பொழுதும், பாடல் ஆடல் என்ற எல்லாவற்றிலும்
பழைய பகைவர்களாம் அசுரர்களின் (கட்கம்) வாளைப் பிளந்து,
இந்திரனுக்கு விண்ணுலக ஆட்சியைத் தந்து உதவின (திறல்)
பராக்ரமத்தைப் புகழ்ந்து,
(சந்தம் ஆரும்) அழகு நிறைந்துள்ள, (நாள்) புதிய மலர்களை சூடிய
கூந்தலையுடைய தெய்வ மகளிரும், இந்திராணியும், கங்கை
கார்த்திகை மாதர், கௌரி முதலிய தாய்மார்களும்
தன்னை அன்புடனே பாடி ஆடும் கீர்த்தியையும், மேலான தன்மை
யையும் பெற்ற கூரிய வேல் ஆகும்.
கங்கையின் அலைகளைக் கொண்ட சடாபாரத்தை உடைய சிவ
பெருமானுக்கு, அருமையான பிரணவ மந்திர உபதேசம் செய்த
சிரேஷ்டமான குருமூர்த்தி, சிவப்பு நிறமுள்ள, அலங்காரமான
(சிகா) உச்சிக்கொண்டையை உடைய, கோழிக் கொடியை
ஏந்திப் பிடித்தவன்
பூங்கொத்துக்கள் நிறைந்த கடப்ப மலர்களையும், வெட்சி மாலை
களையும், குவளை மலர்களையும், செங்காந்தள் மலர்களையும்
கூதாள மலர்களையும் மாலைகளாகத் தொடுத்து அணிந்த திரு
மார்பை உடையவனும் முருகப்பெருமானின் அழகிய
திருக்கரத்தில் உள்ள வேலே.



(6) ஸிந்து பைரவி — மயில் விருத்தம்-6 — கண்ட சாபு

சங்கார காலமென, அரி பிரமர் வெருவுறச்
 சகல லோகமும் நடுங்கச்
சந்த்ர சூரியர் ஒளித்து இந்த்ராதி அமரரும்
 சஞ்சலப்பட, உமையுடன்
கங்காளர், தனி நாடகம் செய்த போது, அந்த
 காரம் பிறந்திட நெடுங்
ககன கூடமும் மேலை முகடு மூடிய பசுங்
 கற்றைக் கலாப மயிலாம்
சிங்கார குங்கும படீர ம்ருகமத யுகள
 சித்ரப் பயோதர கிரித
தெய்வ வாரண வநிதை புனிதன், குமாரன்
 திருத்தணி மகீதரன் இரும்

கெங்காதரன் கீதம் ஆகிய சுர ஆலய
 க்ருபாகரன் கார்த்திகேயன்

கீர்த்தி மா அசுரர்கள் மடிய, க்ரவுஞ்சகிரி
 கிழிபட, நடாவு மயிலே.



மயில் விருத்தம்-6

யுக முடிவில் சகலமும் அழிக்கப்படும் காலம் வந்து விட்டதோ என்று.
திருமாலும், பிரமனும் அஞ்ச, சகல லோகங்களும் நடுக்கம் உற
 சந்திரனும், சூரியனும் ஒளிந்து கொள்ள, இந்திரன் முதலான
 தேவர்களும் கவலைப்பட, உமா தேவியுடன்
எலும்பாபரணராம் சிவபெருமான் (தனி) ஒப்பற்ற நடனஞ் செய்த
அந்த வேளையில், பேரிருள் சூழ்ந்து கொள்ளும்படி (நெடும்) பரந்த
 ஆகாய வெளியும். விண்ணின் உச்சியும் ஆக இரண்டையும்
 மூடினதான பசிய தொகுதியான தோகையையுடைய மயிலாகும்.
அலங்காரமாக குங்குமத்தையும், சந்தனத்தையும், கஸ்தூரியை
யும் அணிந்துள்ள. (யுகள) இரண்டு, அழகிய கொங்கை மலைகளையுடைய
 தெய்வீகம் நிறைந்த யானை மகளாம் தேவசேனையை (மணந்துள்ள)
 புனித மூர்த்தி, குமார மூர்த்தி, திருத்தணி மலையில் வீற்றிருப்
 பவன். (இரும்) பெரிய
கங்கையை (முடியிற்) சூடியுள்ளவன், இசையைத் தரும் ஏழு
சுரங்களில் (அல்லது உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்ற
மூவகையான வேத இசைகளில்) ஆலய – இருப்பிடம் கொண்டுள்ள
கருணை மூர்த்தி, கிருத்திகை மைந்தன்
 புகழுடன் பெரிய சூராதி அவுணர்கள் இறந்து படவும்,
 கிரவுஞ்சமலை கிழிபடவும் நடத்தப்பட்ட மயில் தான்.

(6) **ஸிந்து பைரவி** **சேவல் விருத்தம்-6** **க-சாபு**

பங்கம் ஆகிய விட புயங்கம் மா படம் அது
    பறித்துச் சிவத்து அருந்தி
  பகிரண்டம் முழுதும் பறந்து நிர்த்தங்கள் புரி
    பச்சைக் கலாப மயிலைத்
துங்கமாய் அன்பு உற்று. வன்பு உற்று அடர்ந்து வரு
    தூடரும் ப்ரேத பூதத்
  தொகுதிகள் பசாசுகள் நிசாசரர் அடங்கலும்
    துண்டப் படக் கொத்துமாம்
மங்கை யாமளை குமரி கங்கை மாலினி கவுரி
    வஞ்சி நான்முகி வராகி
  மலை அரையன் உதவு அமலை திருமுலையில் ஒழுகு பால்
    மகிழ அமுது உண்ட பாலன்
செங்கணன். முதலை இடம் இங்கு உள்ளான் என்னும். நர
    சிங்கமாய் இரணியன் உடல்

  சிந்த. உகிரில் கொடு பிளந்த மால் மருமகன்
    சேவற் திருத்துவசமே

(23)

**சேவல் விருத்தம்-6**

கெடுதியைத் தரும் விஷத்தை உடைய பாம்பின் பெரிய படத்தைத்
துண்டப்படும்படிப் பறித்து. கோபித்து உண்டு
  வெளி அண்டங்கள் முழுதும் பறந்து நடனமிடுகின்ற பச்சைத்
  தோகை மயிலுடன்
பரிசுத்தமான அன்பு பூண்டும், வலிமை வாய்ந்து, நெருங்கித்
தொடர்ந்து வரும் பிணப் பேய்களின்
  கூட்டங்களையும். பிசாசுகளையும், இரவில் உலாவுகின்ற அசு
  ரர்கள் யாவரையும் துண்டாகும்படி கொத்தும்.
மங்கை. யாமளை. குமரி. கங்கை. மாலைகளை அணிந்திருப்பவள், கவுரி
வஞ்சிக்கொடி போன்றவள், பிரமி. வராகி
  மலைராஜனாகிய இமவான் பெற்ற உமாதேவியின் திருமுலையில்
  ஒழுகிய பாலை மகிழ்ச்சியுடன் உண்ட குழந்தை
செந்தாமரைக் கண்ணனாகிய திருமால், (முதலை இடம்) தூணாகிய
இடத்தில் 'இங்கு உள்ளான்' என்று பிரகலாதனால் சொல்லப்பட்ட
வுடன், நரசிங்கமாய் வெளிப்பட்டு, இரணியனுடைய உடல்
  சிதறுண்ண, நகங்களைக் கொண்டு பிளந்த திருமாலின்
  மருகன் ஆகிய முருகவேளின் அழகிய கொடியாகிய சேவல்

(7) பீம்பளாஸ் — **வேல் விருத்தம்-7** — கண்ட சாபு

அண்டங்கள் ஒரு கோடி ஆயினும், குலகிரி
அநந்தம் ஆயினும், மேவினால்

அடைய உருவிப் புறம் போவது அல்லது, தங்கல்
அறியாது, சூரன் உடலைக்

கண்டம் படப் பொருது காலனும் குலைவு உறும்
கடிய கொலை புரியும் அது, செங்
கநக அசலத்தைக் கடைந்து முனையிட்டுக்
கடுக்கின்ற துங்க நெடு வேல்

தண்டம் தநு திகிரி சங்கு கட்கம் கொண்ட
தானவ அந்தகன் மாயவன்

தழல் விழிக் கொடு வரி பரு உடற் பஃறலை
தமனியச் சுடிகையின் மேல்
வண்(டு) ஒன்று கமலத்து மங்கையும், கடல் ஆடை
மங்கையும் பதம் வருடவே
மது மலர்க் கண் துயில் முகுந்தன் மருகன் குகன்
வாகைத் திருக்கை வேலே.

(24)

**வேல் விருத்தம்-7**

ஒரு கோடி அண்டங்கள் எதிரில் இருந்தாலும், சிரேஷ்டமான மலைகள் கணக்கில்லாதன எதிரில் இருந்தாலும், (மேவினால்) எதிர்த்து வந்தால்

முழுதும் உள்ளே உருவிப் (புறம்) வெளியே போகுமே ஒழிய, ஓரிடத்தில் எடுத்த காரியத்தை முடிக்காமல் தங்குதல் என்பதே தெரியாததும், சூரனுடைய உடலைத்

துண்டம்படும்படி போர் செய்து, யமனும் நடுக்கமுறும், கடுமையான கொலைகளைச் செய்கின்றதும், (செம்) செவ்விய

பொன்மலையாகிய மேருகிரியை, கடைந்தது போன்ற பொன் ஒளியையும், (முனை இட்டு) கூர்மை செய்ததற்கு ஒப்பான, பரிசுத்தமான நீண்ட வேல் ஆகும்.

(கௌமோதகி என்னும்) கதையையும், (சாரங்கம் என்னும்) வில்லையும், (சுதர்சனம் என்னும்) சக்கரத்தையும், (பாஞ்சஜன்யம் என்னும்) சங்கையும், (நாந்தகம் என்னும்) வாளையும் கொண்டுள்ள, அசுரர்களுக்கு யமனாயிருந்தவன், மாயம் வல்லவன்

நெருப்பை வீசும் கண்களையும், வளைந்த வரிகளையும், பருத்த உடலையும், பல தலைகளையும், பொன்னிற முடிகளையும் கொண்ட (ஆதிசேடன்) மேல்

வண்டுகள் பொருந்தும், செந்தாமரையில் வாசம் செய்யும் இலக்குமியும் கடலை ஆடையாகக் கொண்ட பூதேவியும், தமது கால்களைப் பிடிக்க

தேன் நிறைந்த தாமரை மலர் போன்ற கண்கள் துயில்கின்ற திருமாலின் மருகன், குகன் ஆகிய முருகப் பெருமானின், வெற்றி விளங்கும் திருக்கையில் உள்ள வேலாயுதமே.

(7) பீம்பளாஸ் — மயில் விருத்தம்-7 — க. சாபு 

தீரப் பயோததி (கி) திக்கும் ஆகாயமும்
செகதலமும் நின்று சுழலத்
திகழ்கின்ற முடி மவுலி சிதறி விழ வெஞ்சிகை
தீக்கொப்புளிக்க வெருளும்

பாரப் பணமுடி அநந்தன் முதல் அரவு எலாம்
பதை பதைத்தே நடுங்கப்
படர் சக்ர வாளகிரி துகள் பட, வையாளி வரு
பச்சை ப்ரவாள மயிலாம்.

ஆர ப்ரதாப புளகித மதன பாபர
அமிர்த கலசக் கொங்கையாள்

ஆடு மயில் நிகர் வல்லி அபிராம வல்லி. பர
மாநந்த வல்லி சிறுவன்

கோர த்ரிசூல த்ரியம்பக ஜடாதார
குரு தரு திருத்தணிகை வேள்

கொடிய நிசிசரர் உதரம் எரி புகுத, விபுதர் பதி
குடி புகுத நடவு மயிலே.



## மயில் விருத்தம்-7

நன்குத (பயோததி-பய உததி) பாற்கடலும். எண் திசைகளும், ஆகாய
மும், பூமியும் நின்று சுழற்சி அடையவும்
விளங்குகின்ற தலையிலுள்ள மணிமுடிகள் சிதறுண்டு விழவும்,
கொடிய உச்சியில் உள்ள படங்கள் எல்லாம் நெருப்பைக் கக்க.
மருண்டு அஞ்சுகின்ற
கனத்த படங்களை உடைய தலைகளைக் கொண்ட ஆதிசேடன் முதலான
பாம்புகள் எல்லாம், துடி துடித்து நடுக்கம் கொள்ளவும்
படர்ந்துள்ள சக்ரவாளகிரி தூள்படவும். பாய்ந்து சவாரி (சுற்றுப்
பயணம்) வரும். பச்சை நிறமும், பவள நிறமும் (கொண்டுள்ள)
படைத்த மயில் ஆகும்.
மிகவும் கீர்த்தியுள்ளதும், புளகாங்கிதம் கொள்வதும், (மதன)
பெருமிதம் உள்ளதும், சந்தனம் அணிந்துள்ளதும், அமுதம் நிறைந்
துள்ள குடம் போன்றதுமான கொங்கையை உடையவள்
நடனம் செய்யும் மயிலை ஒத்த வல்லிக் கொடி போன்றவள்,
அபிராமவல்லி, பரமானந்த நிலையில் உள்ள கொடி போன்றவள்,
ஆகிய பார்வதியின் குமாரன்
பயங்கரமான முத்தலைச் சூலத்தை உடையவரும், மூன்று கண்களை
உடையவரும், சடையை உடையவருமான குருமூர்த்தியாம்
சிவ பெருமான் பெற்ற திருத்தணிகை முருகனை
கொடிய அசுரர்களின் வயிற்றில் எரிபுகவும், தேவர்கள்
தங்கள் ஊராகிய பொன்னுலகில் குடியேறவும் செலுத்திய
மயில் தான்.

(7) பிம்பளாஸ் சேவல் விருத்தம்-7 க சாபு

வீறு ஆன காரி கதி முன் ஓடி பின் ஓடி
வெங்கட் குறும்புகள் தரும்

விடு பேய்களை, கழுவன், கொலை சாவு கொள்ளி வாய்
வெம் பேய்களைத் துரத்திப்
பேறான 'சரவணபவா' என்னும் மந்திரம்
பேசி உச்சாடனத்தாற்
பிடர் பிடித்துக் கொத்தி நகநுதியினால் உறப்
பிய்ச்சுக் களித்து ஆடுமாம்
மாறாத முயலகன் வயிற்று வலி, குன்மம்
மகோதரம் பெரு வியாதி
வாத பித்த சிலேற்பனம் குட்டம் முதலான
வல்ல பிணிகளை மாற்றியே
சீறாத ஓர் ஆறு திருமுக மலர்ந்து அடியார்
சித்தத்து இருக்கும் முருகன்
சிலைகள் உருவிட அயிலை விடு குமர குருபரன்
சேவல் திருத்துவசமே.



சேவல் விருத்தம்-7

பெருமை வாய்ந்த (காரி) பைரவர் (செல்லும்) வழியில் அவர் முன்பு ஓடியும், பின்பு ஓடியும், கொடிய கண்களை உடையனவும், சேஷ்டைகள் புரியனவுமான
தனித்த பேய்களையும், கழுகுகளையும், கொலை சாவுகளுக்குக் காரணமாய் நிற்கும் கொடிய கொள்ளி வாய்ப் பேய்களையும் துரத்தி விரட்டி
(பேறு ஆன) வரம் தரவல்ல 'சரவண பவா' என்னும் மந்திரத்தை ஓதி உருவேற்றும் வகையால் (அல்) ஓட்டும் வகையால்
(அவைகளின்) புறக் கழுத்தைப் பிடித்துக் கொத்தியும், நகத்தின் நுனி கொண்டு அழுத்திப் பிய்த்தும் மகிழ்ந்து ஆடும்.
நீங்காத முயலகன் என்னும் வலிப்பு, வயிற்று வலி, (குன்மம்) வயிற்று உளைவு, பெரு வயிறு, குட்ட நோய் வகை
வாதம், பித்தம், சிலேத்துமம், குட்டம் முதலான வலிய நோய்களைப் போக்கி
கோபிக்காத, ஒப்பற்ற ஆறு திருமுகங்களும் மலர்ந்து விளங்க அருளி, அடியார்களுடைய உள்ளத்தில் வீற்றிருக்கும் முருகன்
கிரௌஞ்சம் எழுகிரி முதலான மலைகளில் ஊடுருவிச் செல்லும்படி வேலைப் பிரயோகித்த குமர குருபர மூர்த்தி ஆகிய வேற் பெருமானது அழகிய கொடி சேவல்

(9) மாண்ட் — வேல் விருத்தம்-8 — க-சாபு

மா முதல் தடிந்து தண் மலை கிரி உருவு போய்
வலிய தானவர் மார்பிடம்

வழி கண்டு கமல பவனத்தனைச் சிறையிட்டு
மகவான் தனைச் சிறை விடுத்து
ஓம இருடித் தலைவர் ஆசி பெற்று உயர் வானில்
உம்பர் சொற் துதி பெற்று, நா

உடைய கீரன் தனது பாடல் பெற்று உலகு தனில்
ஒப்பில் புகழ் பெற்ற வை வேல்
சோம கலச, ப்ரபா (அ)லங்கார தர, ஜடா
சூடி கால (அ)ந்த காவர்

துங்க. ரக்ஷக த்ரோண, கட்க, குலிசம். சூல,
துரக கேசரம் அம்பரச்

சேம வடவா (அ)ம்புயப் பரண சங்(க) ஆபரண
திகம்பர த்ரியம்பக / மகா

தேவ நந்தன. கஜாநந: சகோதர குகன்
செம்பொற் திருக்கை வேலே

(27)

வேல் விருத்தம்-8

மா மரமாய் நின்ற சூரனை வேருடன் அழித்து, குளிர்ச்சி நிறைந்த மலைகளைத் தொளைத்துச் சென்று, (அம்மலைகளில் வாழ்ந்த) வலிமையுடைய அசுரர்களின் மார்பிடத்தில்

வெளி வர வழியை உண்டாக்கி, தாமரையை வீடாகக் கொண்ட பிரமனைச் சிறையிலிட்டு. இந்திரனைச் சிறையிலிருந்து விடுவித்து வேள்வி செய்யும் முனிபுங்கவர்களின் வாழ்த்தைப் பெற்று, உயர்ந்த மேலுலகில் உள்ள தேவர்களின் துதிக்கின்ற தோத்திரங்களைப் பெற்று (நா) நா வன்மை (தோத்திர) வார்த்தை பொலிவு

உடைய நக்கீரருடைய பாடலைப் பெற்று, உலகில் நிகரில்லாத புகழினை அடைந்துள்ள கூரிய வேல் ஆகும்.

(கலச சோம) கிண்ணம் போன்ற பிறைச் சந்திரனுடைய, ஒளி அலங்காரத்தைத் தரித்து. சடையில் சூடியுள்ளவர், காலனுக்கு முடிவைச் செய்த திருவடியினர்

பரிசுத்தமானதும், காப்பாற்றுவதுமான வில். (கட்கம்) வாள், குலிசாயுதம், சூலம் இவைகளைத் தாங்குபவரும், குதிரை முகத்துடன் (கேசரம்) சிங்கம் போன்று (அம்பரம்) கடலிலே - கடல் கரைகடவாதபடி காப்பாற்றுகின்ற வடவாமுகாக்கினியை (அம்புயம்) திருமஞ்சன நீராக (பரண) தாங்குபவரும், சங்க வெண் குழை தரித்தவரும், திக்குகளையே ஆடையாக உடுத்தவரும், மூன்று கண்களை உடையவருமான, மகா

தேவருடைய புதல்வரும், யானை முகமுடைய விநாயகரது சகோதரருமான குகப்பெருமானுடைய செவ்விய பொன்னிறமுள்ள திருக்கரத்து வேலாயுதமே.

(8) மாண்ட் — மயில் விருத்தம்-8 — க-தாபு

செக்கர் அளகேச சிக ரத்ந புரி ராசி நிரை
சிந்தப் புராரி அமிர்தம்

திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகு வாய்கள்
தீ விஷங் கொப்புளிப்பச்

சக்ரகிரி சூழ வரு மண்டலங்கள், சகல
சங்கார, கோர நயனத்
தறுகண் வாசுகி பணமுடி எடுத்(து) உதறும் அரு
சண்ட ப்ரசண்ட மயிலாம்

விக்ரம கிராதகுலி புனமீது உலாவிய
விருத்தன், திருத்தணிகை வாழ்
வேலாயுதன், பழ வினைத் துயர் அறுத்து, எனை
வெளிப்பட உணர்த்தி அருளி

துக்க சுக பேதம் அற வாழ்வித்த கந்தச்
சுவாமி வாகனம் ஆனது துர்
துரக கஜ ரத கடக விகட தட நிருதர் குல
துஷ்டர் நிஷ்டூர மயிலே.



மயில் விருத்தம்-8

செந்நிறத்ததாய், குபேர சம்பத்துப் போன்றதான (சிகர) உச்சியிலுள்ள
ரத்னங்கள் (புரி) விளங்கும், (ராசி நிரை) கூட்டத்தின் வரிசைகள்
சிதறிச் சிந்தும்படி, திரிபுரத்தை எரித்த சிவபெருமான், அமிர்தம்
போல் உண்ட ஆலகால விஷம்
மறுபடியும் தோன்றி எழுந்ததோ என்று சொல்லும்படி. தனது
ஆயிரம் பிளந்த வாய்களும். நெருப்புப் போன்ற கொடிய நஞ்சைக்
கக்கி வெளிப்படுத்த
சக்ரவாளகிரி சூழ்ந்த பூமியின் இடங்கள், (சகல) யாவற்றையும்
அழிக்க வல்ல. பயங்கரமான கண்களை உடைய
கொடுமையுடைய வாசுகி என்ற நாகராஜனது, படங்களை உடைய,
முடிகளை தூக்கி உதறுகின்ற ஒப்பற்ற (சண்ட) கடும் வேகமுள்ளதும்
(பிரசண்ட) வீரமுள்ளதுமான மயில் ஆகும்
பராக்ரமம் உடைய, வேடர் குலத்தவளாகிய வள்ளியின் தினைப்புனத்
தில் உலாவின, கிழ வடிவங் கொண்டவன், திருத்தணிகை மலையில் வாழ்கின்ற
வேலாயுதன், பழவினை என்னும் துன்பத்தை அறுத்து, (என்னை) எனக்கு
புலப்படும்படி, நான் அறிந்து கொள்ளும்படி உபதேசித்தருளி (நான்
யார் என்பதை நான் உணரும்படி உபதேசித்து அருளி)
துன்பம் இன்பம் என்னும் பேத நிலை தெரியாத வகையில் (என்னை) வாழ்
வித்த கந்தசுவாமியின் வாகனம் ஆனதும் (துர்) ஒப்பற்றதும்
குதிரை. யானை, தேர். காலாள் எனப்படும், (விகட) மிகுந்த அள
வுள்ள. (தட) பெருமை மிக்க அசுரர் கூட்டமாகிய துஷ்டர்களிடம்
(நிஷ்டூர) கொடுமை காட்டுகின்ற மயிலே.

(8) மாண்ட் சேவல் விருத்தம்-8 கண்டசாபு

வந்து ஆர்ப்பரிக்கும் அம் மிண்டு வகை தண்ட தரன்
வலிய தூதுவர் பில்கி பேய்
வஞ்சினற் பேது உற மகா பூதம் அஞ்சிட
வாயினும் காலினும்
பந்து ஆடியே மிதித்துக் கொட்டி வடவை, செம்
பவளமாக் அதிகாசமாப்

பசுஞ் சிறைத் தலமிசைத் தனி அயிற் குமரனைப்
பார்த்து அன்புறக் கூவுமாம்

முந்து ஆகமப் பலகை சங்க ஆகமத்தர் தொழ,
முன்பு ஏறு முத்தி முருகன்

முது கானகத்து எயினர் பண்டு ஓட, அயிற் கணை
முனிந்தே தொடுத்த சிறுவன்
சிந்தாகுலத்தை அடர் கந்தர எனப் பரவு
சித்தர்க்கு இரங்கு அறுமுகன்

செய வெற்றி வேள் புநிதன், நளினத்தன் முடி குற்றி
சேவல் திருத்துவசமே.

(29)

சேவல் விருத்தம்-8

வந்து ஆரவாரம் செய்து. அம் மதத்துடன் அடர்ந்து நெருங்கி வரும்
தண்டாயுதத்தை ஏந்திய யமனுடைய வலிய தூதர்களும், பேய் பில்கிகளும்
தனது கூறலால், பெருங்கோபத்தால் (பேது உற) மதி மயங்கும்படியும்
பெரிய பூதங்கள் அஞ்சும்படியும், தனது வாயினாலும், காலினாலும்
பந்தாடுவது போல மிதித்து, அடித்து. வடவாமுகாக்கினியையும்
அது சிவந்த பவளமணி போல (அவ்வளவு சிறிய அற்பமான பொருளாக)
மதித்து. (அதிகாசமாக) பெருநகை புரிந்து
தனது பசிய (சிறைத் தலமிசை) சிறகுகளாம் இடத்தின் மீது
(முதுகில்) வீற்றிருக்கும். ஒப்பற்ற வேலாயுதத்தை ஏந்திய
முருகவேளைப் பார்த்து அன்புடன் கூவும்.
மேம்பட்டு விளங்கும், கல்வி அளக்கும் பலகையாகிய சங்கப் பலகை
யில், சங்கக் கல்வியாளர்களாம் (49) புலவர்களும் தொழுது வணங்க
முன் ஏறி வீற்றிருந்தவனும், முத்தி தரும் ப்ரபுவும் ஆகிய முருகன்
பழமையான காட்டு வேடர்கள், முன்பு (அஞ்சி) ஓட, கூறிய
பாணங்களைத் தொடுத்த (செலுத்தின) சிறுவன்
மன வருத்தங்களைத் (அடர்) தாக்கி ஒழிக்கும் கந்தபிரானே என்று
போற்றித் தொழுகின்ற (சித்தர்க்கு) உள்ளத்தவர்க்கு மனம்
இரங்கி அருள் புரியும் ஆறுமுகப் பெருமான்
மிகுந்த வெற்றியையே உடைய செவ்வேட் பரமன், பரிசுத்த
மூர்த்தி, (நளினத்தன்) தாமரையில் வீற்றிருக்கும் பிரமனது
(முடி) தலையில் கிடித்துப் புடைத்தவனாகிய முருகப் பெருமானுடைய
கொடியாகிய அழகிய சேவல்.

(9) துர்கா — வேல் விருத்தம்-9 — கண்ட சாபு

தேடுதற்கு அரிதான நவமணி அழுத்தி இரு
செங்கரனை அமுதம் வாய் கொள்
செயம் அளித்து அருள் எனக்கு என உவப்பொடு வந்து
சேவடி பிடித்த(து) எனவும்
நீடு மைக் கடல் சுட்டதிற்(கு) அடைந்து எழு கடலும்
நீ எமைக் காக்க எனவும்

நிபிட முடி நெடிய கிரி எந்தமை கா எனவும்
நிகழ்கின்ற துங்க நெடு வேல்.

ஆடும் மைக் கணபணக் கதிர் முடிப் புடை எயிற்று,
அடல் எரி கொடிய உக்ர

அழல் விழிப் படுகொலை கடைய கட்செவியினுக்கு
அரசினைத் தனி எடுத்தே
சாடு(ம்) மைப் புயலெனப் பசுநிறச் சிகரியில்
தாய் திமித்துடன் நடிக்கும்

சமர மயில் வாகனன். அமரர் தொழு(ம்) நாயகன்
சண்முகன் தன் கை வேலே.

தேடி அடைவதற்கு அரியனவான நவ இரத்தின மணிகள் பதித்து
வைத்தது போன்ற செவ்விய கிரணங்களை உடைய சூரியனை(அமுதம்)
கரிய மேகங்கள் வாயால் கௌவி உண்டு மறைக்கும்படியான
வெற்றியை, எனக்குத் தந்தருள் என்று கேட்டு, மகிழ்ச்சியொடு
வந்து தனது சிவந்த அடியைப் பிடித்தது போலவும்
நீண்ட கரிய கடல்கள் (சூரியனால்) சுடுபட்ட காரணத்தால், சரணம்
அடைந்து, எழுகடல்களும் (வேற்பிரானே! நீ) எங்களைக் காத்தருளுக
என்று கூறவும்
நெருங்கிய சிகரங்களை உடைய, நீண்ட மலைகள் யாவும் எங்களை
காத்தருளுக எனவும், வேண்டும்படி விளங்கி நிற்கும். பரிசுத
தமான நீண்ட வேல்.
ஆடுகின்ற (மை) பசிய (அல்லது ஐ-அழகிய) கூட்டமான படங்களையும்,
ஒளி வீசும் முடிகளையும் (புடை) வாயின் பக்கங்களில் (எயிற்று) பற்களில்
பலத்த நெருப்பையும், கொடியதும், உக்ரமானதுமான
நெருப்புக் கண்ணையும், கொடுங் கொலைக்கு (கடைய) இடமான, பாம்
புகளுக்கு அரசாகிய ஆதிசேடனைத் தனியாக எடுத்துத் தூக்கி
அடித்து உதறுவதும், கரிய மேகம் என்று சொல்லும்படி பச்சை
மாமலை போல, (தாய்) தாவி அடிவைத்து, (திமித்துடன்) நடன தாளத்
துடன் நடனம் செய்வதும்
போரில் வல்ல மயிலை வாகனமாக உடையவன் - தேவர்கள்
வணங்கும் தலைவன், ஷண்முகன் ஆகிய முருகப் பெருமானின்
திருக்கரத்து வேலாயுதமே.

(9) துர்கா — மயில் விருத்தம்-9 — கண்டசாபு

சிகர தமணிய மேரு கிரி, ரசத கிரி, நீல
கிரி எனவும் ஆயிர முகத்
தெய்வ நதி காளிந்தி, என நீழல் கிட்டு, வெண்
திங்கள் சங்(கு) எனவும் ப்ரபா

நிகர் எனவும் எழுத அரிய நேமியென உலகடைய
நின்ற, மா முகில் என்னவே

நெடிய முதுக்கன முகடு உற, வீசி நிமிரும், உரு
நீலக் கலாப மயிலாம்.

அகரு மரு மணம் வீசு தணிகை அபிராம வேள்
அடியவர்கள் மிடி அகலவே
அடல் வேல் கரத்து அசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாம் அசையவே
மகர கன கோமளக் குண்டலம் பல அசைய
வல் அவுணர் மனம் அசைய, மால்

வரை அசைய உரக பிலம் அசைய எண் திசை அசைய
வையாளி ஏறு மயிலே.



## மயில் விருத்தம்-9

சிகரங்களை உடைய, பொன் மயமான, மேரு மலை, வெள்ளியங்கிரி,
நீல நிறமுள்ள மலை என்று சொல்லும் படியும், ஆயிர முகங்களுடன் பரவி வரும்
தெய்வநதி கங்கை, யமுனை என்று சொல்லும்படியும், (நீழலிட்டு)
உளி வீசி, வெண்ணிலா, வெண் சங்கு என்று சொல்லும்படியும்,
பிரபைக்கு - திருவாசிக்கு
(விரிந்த தோகை) ஒப்பாகும் என்றும், எழுதற்கு அரியதான சக்கரம்
போல வட்ட வடிவுள்ளதெனவும், உலக முழுமையும் பரவி நின்ற
பெருமையுடைய மேகத்துக்கு ஒப்பாகும் என்றும் கூறத்தக்க வகையில்
நீண்ட, பழமையான, ஆகாய முகட்டினை (உற) பொருந்தும்படி
கலாபத்தை வீசி நிமிர்ந்து விளங்கும் (உரு) ஒப்பற்ற நீலத்
தோகையையுடைய மயில் ஆகும்.
அகிலும், மருக்கொழுந்தும் மணம் வீசுகின்ற திருத்தணிகையில்
(வீற்றிருக்கும்) அழகிய முருகவேள், தனது அடியார்களின் வறுமை நீங்க
வெற்றி வேல் திருக்கரத்தில் அசையவும், பன்னிரு
திருப்புயங்களிலும், மாலைக் குவியல்கள் அசையவும்
மீன் வடிவுள்ள, (கன) பொன்னாலாய, அழகிய குண்டலங்கள்
பலவும் அசையவும், வலிய அசுரர்களின் மனம் கலக்கம்
அடையவும், (மால்) பெரிய
மலைகள் அசையவும், நாக லோக பாதாளம் அசையவும்,
எட்டுத் திசைகளும் அசையவும் (வையாளி) சவாரிச் சுற்றுப்
பயணத்தின் பொருட்டு (ஏறு) ஏறி, (முருக வேள்) பவனி
வருகின்ற மயில் தான்.

(9) தூர்கா **சேவல் விருத்தம்-9** கண்ட சாபு

உருவாய், எவர்க்கும் நினைவு அரிதாய், அனைத்து உலகும்
உளதாய், உயிர்க்கு உயிரதாய்
உணர்வாய், விரிப்ப அரிய உரை தேர், பரப்பிரம
ஒளியாய், அருட் பொருளதாய்

வரும் ஈசனைக் களபமுகன் ஆதரித்(து)திசையை
வலமாய் மதிக்க வருமுன்

வளர் முருகனைக் கொண்டு, தரணி வலம் வந்தான் முன்
வைகும் மயிலைப் புகழுமாம்

குரு மா மணித்திரள் கொழிக்கும் புனற் கடக்
குன்றுதோறுடன் பழனம்

குலவு பழமுதிர்சோலை, ஆவினன் குடி. பரங்
குன்றிடம் திருவேரகம்
திரை ஆழி முத்தைத் தரங்கக் கை சிந்தித்
தெளித்திடும். செந்தில் நகர் வாழ்
திடம் உடைய அடியர் தொழு பழையவன் குலவுற்ற
சேவற் திருத் துவசமே.



**சேவல் விருத்தம் -9**

உருவுடையதாய், எவர்க்கும் நினைக்க அரியதாய், எல்லா உலகிலும்
நிலைபெற்றிருப்பதாய், உயிர்க்குயிராய் நிற்பதாய்
அறிவாய், விரித்துப் பேசுதற்கு அரியதான (உரை) வேத மொழிகள்
(தேர்) ஆராய்கின்ற பரப்பிரம ஜோதியாய், அருள் பாலிக்கும்
(பொருளதாய்) கடவுளாய்
விளங்கி வரும் சிவ பெருமானை, யானை முகப் பெருமான் அன்பு பூண்டு
எண்திசைகளையும் வலம் வந்து, யாவரும் மதித்துப் பாராட்டுதற்கு
வாய்ப்பதற்கு முன்பாகவே
விளங்கும் முருகவேளைத் (தன் முதுகின் மேல்) கொண்டு வந்து
பூமியை வலம் வந்த அந்த முருகப் பெருமான் முன்னிலையில்
(வைகும்) இருக்கும் மயிலைப் புகழ்ந்து மகிழும்.
(குரு) நிறமுள்ள (மா) சிறந்த ரத்னத் திரள்களைக் கொழிக்கின்ற
(புனல்) அருவிகளையும், (கடம்) காட்டையும் கொண்ட பல மலைகளிலும்
(பழனம்) வயல்கள்
விளங்கும் பழமுதிர் சோலை, திருஆவினன்குடி, திருப்பரங்குன்றத்
தலம், திருவேரகம்.
அலை கடல் முத்துக்களைத் தனது அலைகளாம் கைகளால் சிதறி வீசும்
திருச்செந்தூரிலும் வாழ்கின்றவனும்
திட பக்தியை உடைய அடியார்கள் தொழுகின்ற, பழம் பொருளா
கிய முருகப்பெருமானிடம் (குலவுற்ற) விளங்கும் அழகிய கொடி
யாகிய சேவல்.

(10) <u>மத்யமாவதி</u> <u>வேல் விருத்தம்-10</u> <u>கண்ட சாபு</u>

வளாரி அலல் ஆகுலம் இலா(து) அகலவே
கரிய மால், அறியு நாலு மறை நூல்

வலான், அலைவு இலான், நசிவு இலான், மலை விலான் இவர்
மனோலய உலாசம் உறவே

உலாவரு கலோல(ம்) மகர ஆலய சலங்களும்,
உலோக நிலை நீர் நிலை இலா

ஒலா ஒலி நிசாசரர் உலோகம் அது எலாம் அழல்
உலாவிய நிலாவு கொலை வேல்

சிலா வட, கலா விநோத, ஆசு இலி முகா, விலோசன
தின சிலா தணி, விலா

இலா, மலர் எலாம், மதியம் மோதி, மதி சேல் ஒழிய,
சேவக, சராப முகிலாம்.



<u>வேல் விருத்தம்-10</u>

(வளாரி) வளாசுரனுக்குப் பகைவனாகிய இந்திரனுடைய (அல்லல்) துன்பங்கள், (ஆகுலம்) கலக்கம் வருத்தம் இல்லாமல் ஒழிந்து போகவும், கருநிறமுள்ள திருமாலும், அறியத்தக்க நான்கு வேதங்களில் வல்லவனாகிய பிரமனும், அலைச்சல் இல்லாதவனும், அழிவு இல்லாதவனுமான, மேரு மலையை வில்லாகக் கொண்டவனுமாகிய சிவனும், ஆகிய இவர்கள் மன அமைதியாம் மகிழ்ச்சி அடையுமாறும்

உலவி வரும் அலைகளையும், மகர மீன்களையும் உடைய (ஆலய) இடமாகிய கடலின் நீரும், (உலோக நிலை) பூமியிலுள்ள உயிர்கள் நிலையுற்றிருத்தலும் (நீர் நிலை) நீரில் உள்ள உயிர்கள் நிலையுற்றிருத்தலும், இல்லாத வண்ணம் தகாத கூச்சல் செய்யும் அசுரர்கள் வாழ்ந்த உலகங்கள் எல்லாவற்றிலும், நெருப்பு உலாவும்படி, சூழ்ந்து வந்த, அசுரர்களைக் கொன்ற வேலாயுதம் ஆகும்.

(வட சிலா) வடக்கேயுள்ள கந்தமாதன கிரியில், சகல கலைகளிலும் பொழுது போக்குபவரும், குற்றமில்லாத முகங்களை உடையவரும்.

(விலோசன) சிறந்த கண்களை உடையவரும், (தின தணி சிலா) சிறிய மலையாகிய தணிகையில் வாழ்பவரும், வில்லை ஏந்தியவரும்

(மலர் எலாம்.... சேவக சிலா) சுனையில் மலர்கின்ற மலர்கள் யாவும், சந்திரனைத் தொட்டு மோதி, சந்திரனிடத்துள்ள சேல் மீன் போன்ற களங்கம் ஒழிய, (சேவக) திறமையைக் காட்டிய (சிலா) வள்ளி மலையில், சரபப்புள்ளையும், மேகத்தையும் ஒத்த திருமால்

[மலர் எலாம் மதியம் மோதி : மலையின் உயரம் சந்திரனைத் தொட்டது என்ற படி]

(34)

விலாச கலியாண கல சேர பசு,மேல்,முல

மேவிய விலாச அகலன்

(34)

விலாசமான மங்களகரமுடைய (கல்) திருமகளாகிய மானை, (சேர) (குணங்களால்) புணர. (பசு) அப்போது தோன்றிய அன்பாவாகிய வள்ளியின், (மேல்) முன்பொருகால், தனங்களைத் தழுவிய, (விலாச) அழகிய (அகலன்) திருமார்பை உடையவனும்

விலாழியினில் ஆழி அகல் வானில் அனல் ஆர விடு

வேழம் இளைஞன் கை வேலே

தனது துதிக்கை உமிழும் நீரால், (ஆழி) கடலிடத்தும், பரந்த ஆகாயத்தும் (அனல்) உள்ள சூட்டை (ஆர) நிரம்ப (விடு) நீக்கும். கணபதியின் தம்பியும் ஆகிய முருகப்பெருமானுடைய திருக்கரத்திலுள்ள வேலாயுதமே.

(10) <u>மத்யமாவதி</u> <u>மயில் விருத்தம்-10</u> <u>க·சாபு</u>

நிராசத விராசத வரோதய, பராபரன்,

நிராகுலன் நிராமய பிரான்

<u>மயில் விருத்தம்-10</u>

முக்குணங்களில் ஒன்றான இராசத (ரஜோ) குணம் இல்லாதவன், ராஜஸ குணத்துக்கு மாறுபாடான சாத்வீக குணத்தை உடையவன், வரங்களுக்கு இருப்பிடமானவன், மேலான பரம்பொருள், வருத்தம் அற்றவன், (நிராமய) நோயற்றவன், (பிரான்) உயிர்களை விட்டுப் பிரியாதவன் (அல்) தலைவன்

நி(ல்)லாது எழுதலால் அறமிலான் நெறியிலான், நெறி

நிலாவிய உலாச இதயன்

(அறமிலான்) அறமில்லாதவனும். (நெறியிலான்) நன்னெறியில்லாதவனும் (நில்லாது) தம்மிடத்தில் சாராது (எழுதலால்) விலகுவதால், (நெறி நிலாவிய) நன்னெறியில் விளங்குகின்ற, (உலாச) சந்தோஷமான உள்ளத்தை உடையவன்

குராமலி விராவு உமிழ் பராரை அமரா, நிழல்

குரா, நிழல் பராவு தணிகைக்

(குராமலி) குராமரத்தில் நிறைந்து, (விராவு) கலந்து (உமிழ்) வெளித் தோன்றும், (பராரை) பருத்த அடிப்பாகத்தில் (திருவிடைக்கழியில்) (அமரா) அமர்ந்து, (நிழல் குரா) ஒளி பொருந்திய குரா மரங்களின், (நிழல் பராவு) நிழல் மிகுந்துள்ள தணிகை என்கின்ற

குலாசல சராசரம் எலாம் இனி(து) உலாவிய
  உலாவிய கலாப மயிலாம்

புராரி குமரா குருபரா எனும் வரோதய
  புராதன(ன்) முராரி மருகன்

புலோமசை க்ஷாமிடு புலாசன வலாரி . புக
  லாகும் அயில் ஆயுதன் நெடும்
தராதல கிராதர்கள் கு(ல) ஆதவ அபிராம வல
  சாதனன் விநோத சமரன்

தடாரி விகடாசுரன் குடாரி (இ)த படா திகழ்
  ஷடாநநன் நடாவு மயிலே .

(35)

...சிறந்த மலை முதலாக, அசைவன, அசையாதனவாகிய எல்லா வற்றிலும் . இனிமையுடன் உலாவிய, (உலாவிய) களித்த தோகை மயில் ஆகும் .

திரிபுரத்தை எரித்த பரமசிவன் 'குமரனே' குருமூர்த்தியே என்று புகழ்ந்த வரங்களுக்கு இருப்பிடமானவனும், பழையோனும், ஆகிய திருமால் மருகன்

(புலாசன) கிளி போன்ற இந்திராணி வணங்கும் (வலாரி) இந்திர னுக்குப் புகலிடமாகிய - அடைக்கல ஸ்தானமான வேலாயுதன் நீண்ட பூமியில் உள்ள வேடர்களின் குலத்துக்கு சூரியனைப் போல (மாப்பிள்ளையாய்) விளங்கும் அழகனும் (வல சாதனன்) வல்லமை யைச் சாதித்தவன் . விளையாட்டாகப் போர் புரிகின்றவன்

கிரௌஞ்சமலைக்குப் பகையாய் இருந்தவன், தொந்தரவு தந்த அசுரன் சூரனை (சூர்மாவை) குடாரி - வெட்டித் தள்ள கோடரி போல இருந்தவன் (இத படா) இதம் பட்டு - மகிழ்ச்சியுற்று விளங் குகின்ற ஆறு திருமுகங்களை உடையவன் ஆகிய முருகன் செலுத்துகின்ற மயில் தான் .

(10) <u>மத்யமாவதி</u>  ## சேவல் விருத்தம்-10  <u>கண்டசாபு</u>

மகர சலநிதி சுவற, உரக பதி முடி பதற,
  மலைகள் கிடு கிடு கிடு எனவே
மகுட குட வட சிகரி முகடு பட பட படென
  மதகரிகள் உயிர் சிதறவே

சேவல் விருத்தம்-10

மகர மீன்கள் நிறைந்த கடல் சுவறவும், நாக ராஜனாகிய ஆதிசேஷனது தலைகள் நடுங்கவும், மலைகள் கிடு கிடு கிடென்று அசையவும் சிகரங்களை உடையதும்;(குடம்) திரட்சி உடையதுமான மேரு மலையின் உச்சி பட பட பட என்று கலக்கமுறவும், மத யானை களின் உயிர்கள் சிதறவும்

ககன முதல் அண்டங்கள் கண்ட துண்டப் படக்
கர்ச்சித்து இரைத்து அலறியே
காரை ஆழிந் நகரார் மாரைப் பிளந்து, சிற
கைக் கொட்டி நின்று ஆடுமாம்

சுவர்க்கமாதிய அண்டங்கள் சின்னபின்னமாக கர்ஜித்து இரைத்து அலறியே – பேரிரைச்சலிட்டு
கடல் சூழ்ந்த காரை நகர் – இலங்கைத் தீவில் உள்ள காரை நகர் ஆகிய இடங்களில் இருந்தவர்களும் – (ராவணனுடைய இனத்தவர்களுமான) அசுரர்களின் மார்பைப் பிளந்து, தனது சிறகை அடித்து நின்று ஆடும்.

சுக விமல அமல பரை இமைய வரை தரு குமரி
துடி இடை அனகை அசலையாள்

சுக சொரூபமான விமலை, மலம் இல்லாதவள், பராசக்தி, இமவான் ஈன்ற குமாரி, உடுக்கை போன்ற இடையை உடைய பாபமற்றவள், (அசலையாள்) மலையாள் ஆகிய தேவியின்

சுதன் முருகன் மதுர மொழி உழை வநிதை இப வநிதை
துணைவன் எனது இதய நிலையோன்

குமாரன், முருகன், இனிமையான பேச்சை உடைய மான்மகள் வள்ளி, யானை வளர்த்த தேவசேனை இவர் தம் கணவன், என்னுடைய உள்ளத்தில் நிலை பெற்றிருப்பவன்

திகுட திகுட திதிகுட தகுட திதகுட திகுட
செக்கண செகக்கண எனத்
திரு நடனம் இடு மயிலில் வரு குமர குருபரன்
சேவல் திருத்துவசமே.

திகுட திகுட திதிகுட தகுட திதகுட திகுட, செக்கண செகக்கண என்ற ஒலிகளுடன்
அழகிய நடனத்தைச் செய்கின்ற மயில் மீது வரும் குமர குருபர மூர்த்தியின் அழகிய கொடியாகிய சேவல்

---

(11) மத்யமாவதி — சேவல் விருத்தம்-11 — கண்ட சாபு

பூவில் அயன், வாசவன், முராரி, முநிவோர் அமரர்
பூசனை செய்வோர் மகிழவே
பூதரமும் எழு கடலும் ஆட அமுது உற, அநு
போக பதினாலுலகும்

வேல் விருத்தம்-11

தாமரைப் பூவில் வாசம் செய்யும் பிரமன், இந்திரன், திருமால், முநிவோர்கள், தேவர்கள், பூசை செய்யும் அடியார்கள் ஆகியோர் மகிழவும்
மலைகளும், ஏழு கடல்களும் ஆடவும், இன்பமுற, அநுபவித்து வாழும் பதினாலுலகங்களிலும்

தாவு புகழ் மீறிட நிசாசரர்கள் மாள, வரு
தான தவ நூல் தழையவே
தாள் வலியதான பல பேய்கள் அஞ்சச், சிறகு
கொட்டிக் குரல் பயிலுமாம்
காவு, கனி வாழை, புளி மாவொடு உயர் தாழை கமு
காடவிகள் பரவு நடனக்

காரண மெய்ஞ்ஞான பரி) சீர் அணவு அரா (அ)சனக்
கனக மயில் வாகனன் அடற்

சேவகன் இராசத இலக்கண உமைக்கு ஒரு
சிகாமணி) சரோருக முக

சீதள குமார கிருபாகர மனோகரன்
சேவல் திருத் துவசமே.

(37)

பரவும் புகழ் மேம்படவும், அசுரர்கள் இறக்கவும் (வரு)
பெருகி வரும் அறநூல்கள் செழிக்கவும்
முயற்சி வலியதான பல பேய்கள் அஞ்சவும், சிறகுகளை
அடித்துக் குரல் எடுத்துக் கூவுமாம்.

சோலைகளிலும், கனிதரும் வாழைமரம், புளிய மரம், மாமரம், இவைகளுடன் உயர்ந்து வளரும் (தாழை) தென்னை, (கமுகு) பாக்கு மரம் இவைகளைக் கொண்ட (அடவி) காடுகளிலும், பரவிச் செய்கின்ற நடனத்தை உடையதும்

முருகவேள் ஆட்கொண்ட காரணத்தால் மெய்ஞ்ஞானத்தை அடைந்ததான (பரி) வாகனமாம் (சீர் அணவு) புகழ் அடைந்துள்ளதும் (அரா அசனம்) பாம்பை உணவாக உடையதுமான பொன் மயிலை வாகனமாகக் கொண்டவன், (அடல்) வலிமை உடைய பராக்ரமசாலி, ராஜத லக்ஷணம் நிறைந்த உமாதேவிக்கு ஒப்பற்ற சிரோரத்னம் போன்றவன், (சரோருக முக) தாமரை போன்ற திருமுகத்தை உடைய

தண்மை வாய்ந்த குமாரக் கடவுளும், (கிருபாகர) கிருபைக்கு உறைவிடமானவனும். (மனோகரன்) மனத்துக்கு மகிழ்ச்சியை செய்பவனும் ஆகிய முருகப் பெருமானின் அழகிய கொடியாகிய சேவல்.

(11) மத்யமாவதி

## மயில் விருத்தம்-11

எந்நாளும் ஒரு சுனையில் இந்த்ர நீலப்போது
இலங்கிய திருத்தணிகை வாழ்
எம்பிரான், இமையவர்கள் தம்பிரான் ஏறும் ஒரு
நம்பிரான் ஆன மயிலைப்
பன்னாளும் அடி பரவும் அருணகிரி நாதன்
பகர்ந்த, அதிமதுரச் சித்ரப்
பாடல் தரு, மாசறு வேல் விருத்தம் ஒரு பத்தும்
மாசறு மயில் விருத்தம் ஒரு பத்தும்
படிப்பவர்கள். ஆதி மறை நூல்
மன் நான்முகம் பெறுவர். அன்னம் ஏறப் பெறுவர்
வாணி தழுவப் பெறுவராய்

மகர ஆலயம் பெறுவர். உவணம் ஏறப் பெறுவர்
வாரிச மடந்தையுடன் வாழ்

அந்நாயகம் பெறுவர்; அயிராவதம் பெறுவர்,
அமுத அசனம் பெறுவர், மேல்

ஆயிரம் பிறை தொழுவர், சீர் பெறுவர், பேர் பெறுவர்
அழியா வரம் பெறுவரே.



மயில் விருத்தம்-11

எல்லாத் தினங்களிலும் ஒப்பற்ற சுனையில். இந்த்ர நீலம் எனப்படும் (போது) மலர் விளங்கும் திருத்தணிகை மலையில் வாழ்கின்ற எமது தலைவன், தேவர்களின் தலைவன் ஆகிய முருகப் பெருமான் ஏறி வருகின்ற ஒப்பற்ற நமக்குத் தலைவனாகிய மயிலைப் பல நாட்களாக. திருவடியைப் போற்றிப் புகழ்கின்ற அருணகிரிநாதன் சொன்ன, மிக இனிமையான, அழகிய பாடல்களாக விளங்குகின்ற (ஆசு அறு) குற்றமில்லாத வேல் விருத்தங்கள் ஒரு பத்தையும், குற்றமில்லாத மயில் விருத்தங்கள் ஒரு பத்தையும் படிப்பவர்கள், ஆதியான வேத நூல்கள் (தம்மிடத்தே) (மன்) நிலைபெற்று விளங்கும் பிரமனுடைய நான்கு முகங்களையும் பெறுவர், (நான்முகம் ஏறும்) அன்ன வாகனத்தின் மீது ஏறும் பாக்கியத்தைப் பெறுவர் கலைமகளைத் தழுவப் பெறுவர் (பிரமனுடைய பதவியைப் பெறுவர் என்றவாறு) மகர மீன்கள் உலவுதற்கு இடமான கடலை இடமாகப் பெறுவர் (வருண பதம் பெறுவர்); கருட வாகனத்தில் ஏறப் பெறுவர்; தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியுடன் வாழும்படியான அந்தத் தலைமைப் பதவியைப் பெறுவர் (விஷ்ணுபதம் பெறுவர்) ஐராவதம் என்னும் வெள்ளையானையின் மீது ஏறப் பெறுவர் (இந்திர பதம் பெறுவர்) அமுத உணவைப் பெறுவர்; பின்னும் சதாபிஷேகம் செய்து கொள்ளும் பாக்கியத்தைப் பெறுவர்; சகல நன்மைகளையும் பெறுவர்; புகழ் பெறுவர்; என்றும் அழியாத முத்தி நலத்தையும் பெறுவார்கள்.

ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்

39

அரிவாய் அரிவாய் அடியோடும்
பாடும் பிழைகளையே

| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | வேல்-1 | மதியும் இரவியும் அலையவே | மதியும் இரவியும் மலையவே |
| 2 | வேல்-1 | மகிழ்வு பெறு மறு சிறையவாம் | மகிழ்வு பெறும் அறு சிறையவாம் |
| 3 | மயில்-4 | முககோடி நதிகரண் குருகோடி அநவரதம் | முககோடி நதிகரண் குருகு ஓடி அநவரதம் |
| 4 | வேல்-5 | மின்பணைகளுமிழு முத்தும் | சொரிமுத்தும் இன்பணைகளுமிழு முத்தும் |
| 5 | மயில்-5 | நீதிமறை ஓதண்ட முப்பத்து | நீதிமறை ஓது அண்ட முப்பத்து |
| 6 | வேல்-6 | மந்தாகினித் தரங்கச் சடிலருக்கரிய மந்த்ர | மந்தாகினித் தரங்கச் சடிலருக்கு அரிய மந்த்ர |
| 7 | வேல்-7 | அநந்தமாயினும் ஏவினை | அநந்தம் ஆயினும் மேவினை |
| 8 | வேல்-8 | உம்பர் சொற்றுறுதி பெற்று | உம்பர் சொற்றுதி பெற்று |
| 9 | வேல்-9 | நீடுமைக் கடல் சுட்டதிற் கடைந்து எழு | நீடுமைக் கடல் சுட்டதிற்கு அடைந்து எழு |
| 10 | வேல்-10 | வலாரியல லாகுவமி லாதகல வேகரிய | வலாரி அலல் அகுவம் இலாது அகலவே கரிய |

1 மலையவே ... தாக்கவும்
2 அறு சிறை ... சிறகுகள் அறுபட்டவையான
3 குருகு ஓடி ... வெண்ணிறத்துடன் பரவிச் சென்று
4 இன்பணைகள் ... இனிய மூங்கில்கள்.
5 ஓது அண்ட ... நீதிமறை ஓதுகின்ற அண்டங்களில் உள்ள
6 அரிய மந்த்ர ... அருமையான பிரணவ மந்த்ர (கரிய...: Black [illegible])
7 மேவினை ... எதிர்த்து வந்தால்
8 சொற்றுதி ... புகழ்ச்சியாம் தோத்திரங்களை
9 அடைந்து ... தபட்ட காரணத்தால் சரணம் அடைந்து
10 இலாது அகலவே ... இல்லாமல் அழிந்து போகவும்.